உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்

திங்கள் வெளியீடு

துணர் ௰சு. { வெகுதானிய, கார்த்திகை } மலர் ௮


க. சிந்தாமணியின் செந்தமிழ் நலம் 283
திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்

உ. யசோதர காவியம்—புத்துரை 290
திரு. வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள்

௩. கூத்தராற் குறிக்கப்பெற்ற சில தலைவர்கள் 300
திரு. T. V. சதாசிவப்பண்டாரத்தார் அவர்கள்

ச. வள்ளல் மலையமான் திருமுடிக் காரி 312
திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளையவர்கள்

ரு. நெஞ்சறிவுறூஉ 317
கொடுமுடி வித்துவான். பெ. கோவிந்தன்

சு. தமிழ்ச்செய்திகள் 320

எ. புத்தக மதிப்புரை 323

அ. நன்கொடைகள் 324
பொழிற்றொண்டர்


செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.




தஞ்சை இராஜராஜேசுவரம்

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௪ | வெகுதானிய, கார்த்திகை | மலர் ௮

## சிந்தாமணியின் செந்தமிழ் நலம்

திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்,
ஔவைத் தமிழகம், போளூர்.

சிந்தாமணியின் செந்தமிழ்நலம் என்ற இத்தலைப்பின்கீழ், முன்னைக் கட்டுரைகளில் சீவகன் மணந்த மகளிருள் குணமாலை, சுரமஞ்சரி என்ற இருவர் குணநலங்களை வகுத்துக் காணுமுகத்தால், குணமாலையும் சுரமஞ்சரியும் சுண்ணம் காரணமாக மாறுபட்டு நீங்கியதும், குணமாலையைச் சீவகன் மணந்ததும், சுரமஞ்சரி சீவகனையே மணக்க வேண்டுமென நோன்பு பூண்டதும் பிறவும் சுருக்கக் கண்டோம். இனிச் சீவகன் சுரமஞ்சரியை மணந்த வரலாறு ஒருவாறுகூறி, இவ்வரலாறுகளைக் கூறுதற்கண், இந்நூலாசிரியர், திருத்தக்கதேவர் காட்டும் செந்தமிழ் நலத்தை உரைக்கத் தொடங்குகின்றேன்.

இருவர் ஒருதொழிலிற் போட்டியிட்டு முயலுமிடத்து, வெற்றியுறுவோர் மகிழ்வதும், மற்றவர் வருந்துவதும் உயிர்களிடத்துக் காணப்படும் இயல்பு. சுண்ணம் காரணமாக எழுந்த மாறுபாட்டில், சுண்ணச் சிறப்பால் வென்றியெய்திய குணமாலை மகிழ்தற்கு உரியவள்; சுரமஞ்சரி வருந்துதற்குரியள். ஆகவே,

குணமாலை மகிழ்வதினும், சுரமஞ்சரி வருந்துவதிலும் புதுமை யொன்றுமின்றாம். மற்று, வென்றியெய்தக்கேட்ட குணமாலை மகிழ்வெய்துதற்குரியளாகவும், அது செய்யாது, சுரமஞ்சரிக்கிரங்கி, அவட்கு ஆறுதல்கூறி வருந்துவாளாயினள். சுரமஞ்சரியோ, நடுநின்று கூறிய சீவகனைச் சினந்து "மழை வள்ளல் என் ஏற்ற சுண்ணத்தை ஏற்பில என்று சொன்ன சொல் தோற்று, வந்து, என் சிலம்படி கைதொழ நோற்பேன்" என்று துணிந்து வாயிட்டுக் கூறுகின்றாள். இதனால், குணமாலை சுண்ணத்தினும் தன்சுண்ணமே உயர்ந்தது என்பதும், இதனை நோக்காது சீவகன் மாறிக் கூறியதற்குக் காரணம் குணமாலையது நோன்புடைமையே என்பதும் சுரமஞ்சரிக்குக் கருத்தாதல் இனிது விளங்குகின்றது. சீவகன் "ஏற்பில என்றசொல் தோற்றுவந்து என் சிலம்படி கைதொழ நோற்பன்" என்று சுரமஞ்சரி கூறுவது, குணமாலை ஆற்றிய அந்நோன்பினையே தானும் ஆற்றி, அதன் துணையால் அவன் சொல் தோல்வியுறுமாறு செய்யவேண்டும் என்னும் துணிபுடையளாவதைக் காட்டுகின்றது; மேலும், அவள் குணமாலையை நோக்கி, "நோற்றனை நீ" என்கின்றாள். எனவே, தான் நோலாமை தன் தோல்விக்குக்காரணம் எனத் தான் தெளிந்தமை சுரமஞ்சரி நன்கு விளங்கக் குணமாலைக்குக் கூறினளாம். இக்கூற்றால், ஒருவர் ஒரு வினையைச் செய்யுமிடத்து, அதனாலாம் பயனுக்கு ஏது, செய்வோரது முன்னைவினைப் பயனே என்பதும், அதனையுணர்ந்து அதற்கேற்பச் செய்வன செய்வதே ஒருவர் அறிவுநெறிக்கு அடுத்ததென்பதும் தேவர் கருத்தாயின.

இனி, குணமாலையைப் பிரிந்து சென்ற சுரமஞ்சரி தன் கன்னிமாடம்ஆடைந்து நோன்பு புரியலுறுவாள். "யான் மணந்தால் சீவகனை மணப்பேன்; இன்றேல், என்நிறை அழிப்பார் பிறர்இலர்" என்று கருதி,

"சென்று காலம் குறுகினும் சீவகன்
பொன் துஞ்சாகம் பொருந்திற் பொருந்துக;
அன்றி என்நிறை யார் அழிப்பார்?"

எனத் துணிந்து ஒடுங்கினாள். சீவகனைக் காய்ந்தேகிய சுரமஞ்சரி அவனையே மணக்க நினைப்பதற்குக் காரணம் என்னை?

ஒரு பெண்மகள் வேறோர் ஆடவனை வெல்வது வேண்டின், அவனை மணந்து தன்னைப் பணியுமாறு செய்து கோடல் ஒன்று; இருபாலார்க்கும் பொதுவாயுள்ள விஞ்சை யொன்றில்

வெல்வது ஒன்று; இவற்றுள் யாதேனும் ஒன்றினைச் செய்யினும் அமையும். பொதுவாய விஞ்சை இசையேயாகும். அதன்கண், சீவகன் நிகரற்றவன்; ஆகலின், அது தவிர்த்து, அவனை மணத்தலையே சுரமஞ்சரி கருதுவாளாயினள். அன்றியும், குணமாலையால் நல்வினையுண்மையின், அவளை நயந்துள்ள நயப்பினால் அவன் அவட்கு வென்றி கூறினனாதல் வேண்டும் என்பது தோழியால் அவள் (சுரமஞ்சரி) எய்திய துணிபாதலின், அக்குணமாலையறிய, அவன் தன்னைப் பணிந்து தன் சிலம்படி தொழுவதினும் அவட்கு இன்பம் தருவது பிறிதில்லை. அதனால் அவனையே தானும் மணப்பது கருதி, "சீவகன் பொன் துஞ்சாகம் பொருந்திற் பொருந்துக" என்றும், அவனைக்குறித்து நோன்பு இயற்றியவழி, அவனையல்லது அவள் கூடற்குரியார் பிறர் இலராவர் என்னும் துணிபுதோன்ற, "அன்றி என் நிறை யார் அழிப்பார்" என்றும் கூறினள்.

எனவே, இங்ஙனம் கருதும் இச்சுரமஞ்சரியின் காமமும் இயற்கையாகாது செயற்கையாமாறு விளங்குகின்றது. குணமாலை, தன்னைச் சீவகன் உயிர்தப்புவித்த நன்றிகண்டு எழுந்த அன்புவயப்பட்டு, அவன்வடிவின் காட்சியால் வேட்கையுற்று, இயற்கைக் காமம் எய்தினளாக, அவனும் அவளது சுண்ண நலத்தால் கண்ட நல்லறிவும், மேனிகண்டதனாற் பிறந்த காமமும் எய்தி இயல்பாகப் பிறங்கும் காதற்காமம் உடையனாகிக் கூடுகின்றான். சுரமஞ்சரியை மணக்குமிடத்துக் காமதிலகன் என்று தன் தோழர் தரவிரும்பும் பெயரைப் பெறுவதே குறிக்கோளாகக் கொண்டு கூடுகின்றான்.

இனி, சீவகன், சுரமஞ்சரியை மணந்த வரலாற்றினைச் சுருங்கக் கூறுவாம்: சுரமஞ்சரி கன்னிமாடம் சமைப்பித்து அதன்கண் இருந்து "சீவகன் பொன் துஞ்சாகம் பொருந்திற் பொருந்துக" என்று நோற்றுவருகின்றாள். அந்நோன்பின் கடுமையினை,

"ஆடவர் தனதிடத் தருகு போயினும்,
நாடிமற் றவர்பெயர் நயந்து கேட்பினும்,
வீடுவல் உயிர் என வெகுளும்" எனவும்.

"காமனே செல்லினும் கனன்று காண்கிலாள்
வேம்எனக் குடம்பெனும் வேய்கொள் தோளி" எனவும்

தேவர் கூறுகின்றார்.

சீவகன், அவள்பால், வயதுமுதிர்ந்த வோர் வேதியனுருக் கொண்டு செல்கின்றான். செல்பவன், சுரமஞ்சரியிருந்த கன்னி

மாடத்தை நெருங்கின அளவில், அவள் சேடியர்போந்து, "ஏதம் இது; போமின்" என்கின்றனர். அவன் இறப்பவும் மெலிந்து அவர் கண்டு நனியிரங்கத் தக்க நிலையனாய் நிற்கின்றான். அது கண்ட அவர் சென்று, மஞ்சரிக்கு உரைப்ப, அவள் கன்னி மாடத்தின் மேனிலத்திலிருந்து தரை நிலத்திற்கு இழிந்து வருபவள், "சோலைவரைமேல் இழியும் தோகைமயில் ஒத்தாள்." பின்பு, அவ்வேதியன் முன்னர், "நாறுமலர்க் கொம்பர் நடை கற்பதென வந்தாள்."

வந்தவள் சீவக வேதியனைக் கண்டு, "ஐயன்மீர், நீவிர் இங்கு வந்த வரவு என்னை?" என்றாளாக, அவன், "என் சிந்தையில் நின்று என்னை வருத்துகின்ற அழகிய நீர்மையினையுடைய குமரியாகிய நின்னைக் கூடவேந்தேன்" என்றும், "சித்தத்தே நவி கின்ற தீர்த்த நீராகிய குமரியாற்றில் மூழ்கியாட வந்தேன், என்றும் கவர்பொருள் எய்த, "சிந்தை நலிகின்ற திருநீர்க் குமரியாட" வந்தேன் என்றான். என்றலும், அதனையுணரமாட்டாத அவள், பிற்கூறிய பொருளையே கருத்தாகக் கொண்டு, "அதனால் உண்டாகக் கூடிய பயன் என்னை?" என்றாள். அதற்கு, அவன், தான் வருதற்குரிய காலத்தில் வராது அதற்கு முன்பே வந்து நலிகின்ற மூப்புப் போம் என்றும், "நீ உன்கண் முன்னே காண என்னைவருத்தும் மூப்புப்போகும்" என்றும் இருபொருள் பட, "முந்தி நலிகின்ற முது மூப்பு ஒழியும்" என்றான். இப்போதும், பிற்காட்டிய பொருளையே கொண்டு, சுரமஞ்சரி, "இவ்வாறு குமரியாடி மூப்பொழிந்தவர் யாவரேனும் உண்டோ?" என்பாள், இகழ்ச்சிதோன்ற நகைத்து, "பிறரும் உளரோ பெறுநர்? பேணிமொழிக" என்று கேட்டாள். அவட்கு, அவன், "துறையறிந்து சேர்ந்து தொழுது ஆடுநர் இல்" என்றான். இதன்கண், "நின்னைக் கூடுதற்குரிய துறை இவ்வாறு வேற்றுருக் கொண்டு போதருவதே என்று அறிந்து, நின்பாற்போந்து, நின்னைத்தொழுது கூடுவோர் பிறர் இல்லை" என்று சீவகன் கருதிக் கூறினான். ஆனால், இதற்கு, "மூப்பொழிக்கும் குமரித் துறையென்பது ஒன்று உளது என்று அறிந்து, அதனையடைந்து பரவி மூழ்குபவர் பிறர் இல்லை" யென்றான் எனவுட்கொண்ட சுரமஞ்சரி, "அற்றேல், அதனை நீவிர் அறிதிர்போலும்" என்பாள், "அறிதிர் பிறநீவிர்" என்றாள். எனவே, அவன், இத்துறையேயன்றிப் பிறதுறைகளையும் யான் அறிவேன்; இதற்கு ஐயம் இல்லை என்றற்கு, "ஐயமிலை" என்றான். சுரமஞ்சரியோ, "கழிந்த இளமையை மீட்டும் பெறலாம் என்று கருதுமிவர்,

செத்தமரம் மழையால் பெயர்த்தும் தளிர்க்கும் என்று கருதும் பித்தர் போல இருக்கின்றார்,'' என்று கருதினவளாய், இவன் பசியைப் போக்கவேண்டி மாடத்துட் சென்றாள். ஆய மகளிரும் சீவக வேதியனை உட்கொண்டேகினர்.

உட்சென்றதும், சுரமஞ்சரி சேடியரைநோக்கி, "இம்முதியோர்க்கு முதுமை மிக்குளது; வாய் பவளத்துண்டம்போல உளது; கண்ணும் பாதமும் கமலம் போன்று இருக்கின்றன; பசியும் மிகுந்திருக்கிறது. நீவிர், அடிசில் கடிதே ஆக்கி, இவண் கொணர்மின்,'' என்றனள். அவர்களும் அவ்வண்ணமேசெய்து அமைத்தனர். சீவகன், அவர்கள்செய்த உபசாரங்களையேற்று உணவுகொண்டு, வெற்றிலைமென்று கவுளில் அடக்கிக்கொண்டு இனிதிருந்தான். அதுகண்ட சுரமஞ்சரி, அவனைநோக்கி, "ஐயன்மீர், நீர் வல்லது என்னை?'' என்றாள். அவட்கு, அவன் தான் மறைந்து வேடம் கொள்வதில் வல்லவன் என்றும், சாம வேதம் பாடுவதில் வல்லவன் என்றும் இருபொருள் எய்துமாறு, "மடவாய், யான் மறைவல்லன்'' என்றான். அதனையறியாத அவள், "நீவிர் கற்றதன் எல்லை யாது?'' என்று வினவினாள். அதற்கு, அவன், "யான் நினைத்தகாரியம் முடியும்வரையில் என் இசைவன்மையைக் காட்டுவேன்'' என்றும், "சாமவேதத்தின் முடிபொருளாகிய தத்துவப்பொருள் எய்துமளவும் சுற்றுவல்லேன்'' என்றும் பொருள்படுமாறு, 'போருள் எய்தி முடிகாறும்' என்று சொன்னான். அதனையுணராத சுரமஞ்சரி, "இன்னும், நீவிர் கற்ற காலத்துச் சிறப்புக்களையும் கூறுமின்,'' என்ற கருத்துக்கொண்டு, "சொல்லும் இன்னும் நீவிர் கற்ற காலம்'' என்றனள். அவன், மேலும் வினுவிடை பெருகுதல்கண்டு, "எனக்கு அது கருத்தன்று'' என்றும், "அக்காலநிலை கூற நினைவில்லேன்'' என்றும் பொருள்பட "சிந்தையிலன்'' என்று மொழிந்தான்.

இச்சொல்லாட்டால் இன்புற்ற சுரமஞ்சரி மேல்விளையப் போவதுநினையாது, "இவர் போல்பவர் இந்நிலவுலகத்தில் இல்லை'' என்று ஏத்தி, விருப்பத்தோடு அவனைநோக்கினள். அதுகண்ட அவன், "இனி, இவள் செல்வாள்'' என்று கருதி, தூங்கிவிழுபவன்போல் வீழ்ந்து நகைச்சுவை யுண்டு பண்ணினான். சுரமஞ்சரியும் நகைத்து நிற்ப, "எனக்கு உறக்கம் வருகின்றது; என் செய்வேன், உரைத்தி'' என்று பரிவுடன்கேட்க, அவள், தனது பட்டு விரித்த கட்டிலின்கண் 'பரிவின்றி உறைக' என்றாள். அவனும் அவ்வாறே உறையலாயினன்; அவளும் சேடியரும் தத்தம்அறைக்குட்புகுந்து அடங்கினர்; பொழுதும் நன்கு மறைந்தது; இராவுக்காலமும் இடையின்றி எய்திவிட்டது.

அணைமேற்கிடந்த சீவகன், கண்ணைத்திறந்து கீதம் ஒன்று மதுரம்படப்பாடினுர். அது கேட்டதும், அவனுடைய சேடியர் பலரும் வந்து அவனைச் சூழ்ந்து கொண்டனர். சுரமஞ்சரியும், பாட்டிசைகேட்டு, பரவசமுற்று, "பனிப்பிறைப்பூணினுன் தன் பாண்வலைச் சென்றுபட்டாள்" என்னுமாறு அவன் அருகு வந்து அணைந்தாள். அவர்களைக் காண்டலும், சீவகன் அவர்கள் வெள்கி நாணத்தக்க சில சொற்களைக் கூறிப்பின்னர், "முதுமை மிக்க யான் பாடியது கேட்டுப் பெரும்பரிவு கொண்டு என்பால் அணையும் நீவிர், இளையவன் ஒருவனைக் காண்பீராயின், என் செய்வீர்?" என்றான், உடனே, அவர்கள் "கெடுக, கெடுக" என்றனர்.

அதனைக் கேட்டதும், சீவக வேதியன், வியப்புற்றவன் போல் நோக்கி, "இளையவர் எவரும் இவளை விரும்பிப்போந்து கேட்டிலர் என்று வெறுத்தோ, அன்றி, அவருள் எவரேனும் தீங்கு செய்தாரென்ற காரணத்தாலோ, எக்காரணத்தால், இளையவர் கெடுக கெடுக "என வெறுக்கின்றீர்கள்?" என வினவினுன். அவர்கள், சுண்ணம் காரணமாகச் சீவகன் சொன்னதும், அது வழியாகச் சுரமஞ்சரி நோன்பு மேற்கொண்டதும் விளங்கக் கூறினர். சீவகன், அவர் கருத்தறிவான்போல, "இவட்குத் தீங்கு சொன்ன அச்சீவகன் 'மாய்ந்தனன் போலும்" என்றான். உடனே, அம்மகளிர், தம் காதுகளைப் பொத்தி, 'சீவகன் வாழ்க' என வாழ்த்தி, "அவன் மாய்ந்திலன்; அதனை யாம் காந்தருவதத்தைபால் தூதனுப்பியறிந்து கொண்டேம்" என்று மொழிந்து, சீவகனைப் பின்னும் பாடுமாறு வேண்டினர். அவனும் சுரமஞ்சரியின் முகத்தை நோக்கிப் பாடத்தொடங்கினுன். இதனை, "மகளிர் தம்முள், உயிர்பெற எழுதப்பட்ட ஓவியப் பாவையொப்பாள் செயிரில் வாண் முகத்தை நோக்கித், தேன்பொதிந்து அமுதமூறப், பயிரிலா நரம்பிற் கீதம்பாடிய தொடங்கினுனே" என்று தேவர் கூறுகின்றார்.

பாடத் தொடங்கிய சீவகன், தலைவன் பிரிந்தவழித் தலைவி மாலையம்பொழுதுகண்டு ஆற்ருது கூறும் துறையில்,

"தொடித் தோள்வளை நெகிழத் தொய்யில் முலைமேல்
வடிக் கேழ்மலர் நெடுங்கண் வார்புயலும் காலும்;
வார்புயலும் காலுப், வளைநெகிழும், நந்திறத்த(து)
ஆர்வமுறு நெஞ்சம் அழுங் குவிக்கும் மாலை (2049)

"ஐதேந் தகலல்குல் ஆவித் தழலுயி ராக்
கைசோர்ந் தணலூன்றிக் கண்ணீர் கவுள் அலைப்ப,
கண்ணீர் கவுள்அலைப்ப, கையற்(று) யாம் இனையப்
புண்ணீரும் வேலிற் புகுந்ததால் மாலை;" (2050)

"அவிழ்ந் தேந்து பூங்கோதை ஆகத் தலர்ந்த
முகிழ்ந் தேந்திள முலைமேல் பொன்பசலை பூப்பப்
பொன் பசலை பூப்ப, பொருகயற்கண் முத்தரும்ப,
அன்புருகு நெஞ்சம் அழுங் குவிக்கு மாலை" (2051)

என்ற இப்பாட்டுக்களைப் பாடினான். இவற்றைக்கேட்ட சுரமஞ்சரி, கூற்று நிகழ்த்தும் தலைவியது நிலையில் தன்னைவைத்து, சீவகனைநினைந்து, அவனைப் பெறுதற்குரிய நோன்பை மேற்கொண்டு மறுநாளே காமக் கடவுளைப் பரவி வரம் வேண்டத் துணிந்தாள்.

மறுநாள், சுரமஞ்சரி, சீவக வேதியனையும் உடனழைத்துக் கொண்டு காமன் கோட்டம் சென்றனள். அங்கே, ஒருபுடையில் சீவகனை மறையவைத்துக் காமனை வணங்கி,

"தாமரைச் செங்கட் செவ்வாய்த் தமனியர்க் குழையினாய்!ஓ
காமம் இங்குடை யேன்;காளை சீவகன் அகலம் சேர்த்தின்,
மாமணிமகரம் அம்பு வண்சிலைக் கரும்பு மான் தேர்
பூமலி மார்ப! ஈவல் ஊரோடும் பொலிய என்றாள்"

அங்கே, சீவகனது தோழர்கள் முன்னே செய்து கொண்ட எற்பாட்டிற்குத்தக, அவருள் புத்திசேனன் என்பவன், காமக் கடவுளின் பின்னே மறைந்து நின்றிருந்தவன், "மட்டவிழ் கோதை! நின் மனம்மகிழ் காதலனை நீ பெற்றாய்; இனி, நில்லாது எழுக" என்று கூறினன். அதனை யுணராத அப்பேதையும், தான் "பரவிய தெய்வம் தான் வாய்விட்டு உரைத்திட்டது" என்று கருதியவளாய்ச் சீவகன் மறைந்திருந்த இடம்சென்றாள். அங்கே, சீவகன் தன் இயற்கை வடிவத்தோடு எழில் விளங்க நின்றான். இருவரும் ஒருவரையொருவர்கண்ணில் ஆரக்கண்டு, "இன்தமிழ் இயற்கை யின்பம் நிலைபெற நெறியில் துய்த்தார்கள்."

பின்பு, சீவகன், சுரமஞ்சரியைப்பிரிந்து நீங்கி, தன் தோழரையடைந்தான். அவர்கள் அவனைக் **காமதிலகன்** என்று வாழ்த்திப் புகழ்ந்தனர். சீவகனும் காமதிலகன் என்னும் பெயர் பெறுவது குறித்துச் சூள் முற்றியதற்கு மகிழ்ந்து, சுரமஞ்சரியையும் முறைப்படி மணந்து கொண்டான்.

ஜைன சமயத்தவரால் செய்யப்பட்ட

# யசோதர காவியம்—புத்துரை

திரு. வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள்

காஞ்சீபுரம்

(முற்றொடர்ச்சி துணர் 14, மலர் 7, பக்கம் 265)


## ஸ்ரீ உபாத்தியாய பரமேட்டிகள் வணக்கம் 4.

55. அங்கநூ லாதி யாவு மரிப்பறத் தெரிந்து தீமைப்
பங்கமேழ் பங்க மாடிப் பரமநன் னெறிப யின்றிட்
டங்கபூ வாதி மெய்ந்நூ லமிழ்தகப் படுத்த டைந்த
நங்களுக் களிக்கு நீரார் நம்வினை கழுவு நீரார்.

பொருள்:—அமிழ்து அங்க பூவாதி மெய்ந்நூல்" என மொழி மாற்றுக.

பொழிப்புரை:—அங்க ஆகமம் முதலான கற்றற்கு உரிய தத்துவ நூல்கள் யாவற்றையும் ஐயமுந்திரிபுமின்றிக் கற்றுக் குற்றம் அற்ற சப்தபங்கி நியாயத்தையும் அறிந்து ஸ்ரீ அருக பரமேட்டிகள் அருளிய ஜினதருமத்தில் ஒழுகி, உயிருக்கு இன்பஞ் செய்தலால் அமிர்தம் போன்ற தாம் கற்ற அங்காகம, பூர்வாகமங்கள் முதலிய உண்மையான தத்துவ நூல்களைக் கற்றற்குத் தம்மை அடையும் நம் போன்றவர்கட்குச் சொல்லி யருளும் பண்பினை உடைய ஸ்ரீ உபாத்தியாய பரமேட்டிகள், நம்முடைய தீவினைகளை நீக்கவல்லவர்கள் ஆதலால், அவர்களு டைய திருவடிகளையாம் வணங்குவாம் என்று கூறினன் அபயருசி.

குறிப்புரை:—அங்க நூல்—அங்க ஆகமம், அரிப்பற— குற்றம் அற; ஐயமும் திரிபும் இன்றி. தீமை—குற்றம். பங்கம்—கேடு; அற. எழ்பங்கம் — சப்த பங்கி நியாயம். ஆடி — அறிந்து. பரமன் — ஸ்ரீ அருகபரமேட்டிகள். நன் னெறி—ஜின தருமம். அங்க பூவாதி—அங்க ஆகமம், பூர்வ



தாராசுரத்திலுள்ள ஸ்ரீ ஐராவதேசுவரர் கோயில்

Copy right: Archaeological Survey of India.

ஆகமம் முதலிய. அகம் படுத்த—கற்றற்கு. அளிக்கும் நீரார்—ஸ்ரீ உபாத்தியாய பரமேட்டிகள்.

சிறப்புரை :—ஸ்ரீ உபாத்தியாய பரமேட்டிகள்—ஸ்ரீ பஞ்ச பரமேட்டிகளுள் ஒருவர் "அங்க நூல்பயின்று வல்லார்" (மேரு மந்-393.) அங்க பூவாதி நூலின்" (மேரு மந்-347, 619.) "அங்க பூவமதா மொழி" (மேரு மந்-636.) (ருசு)

## ஸ்ரீ சாது பரமேட்டிகள் வணக்கம் 5.

56. பேதுறு பிறவி போக்கும் பெருந்திரு வுருவுக் கேற்ற
கோதறு குணங்கள் பெய்த கொள்கல மனைய ராகிச்
சேதியி னெறியின் வேறு சிறந்தது சிந்தை செய்யாச்
சாதுவ ரன்றி யாரே சரணமக் குலகி னுவார்.

பொருள் :—"உலகின் நமக்கு சரண்" என மொழி மாற்றுக.

பொழிப்புரை :—அறிவு கலக்கம் உறுதற்கு ஏதுவான பிறப்பினை நீக்கும் பெருமை பொருந்தியதும், அழகியதும் ஆகிய தவ வேடத்தினுக்குப் பொருந்திய குற்றம் அற்ற நற்குணங்கட்கு இடம் ஆயினாரும், வீடு அடைதற்கு ஏதுவான ஸ்ரீ ஜின தருமத்தினை அன்றி வேறு நெறியில் ஒன்றனையும் சிறந்தது என மனத்தில் நினையாதவரும் ஆகிய சாது பரமேட்டிகள் அல்லாமல் வேறு யார் உலகில் நமக்குப் பாது காப்பு ஆவார்? ஒருவரும் இலர். ஆதலால் யாம், அவர்களுடைய திருவடிகளைத் தியானிப்பாம் என்று கூறினான் அபயருசி.

குறிப்புரை :—பேது உறு பிறவி—அறிவு கலக்கம் உறுதற்கு ஏதுவான பிறப்பு. கோது—குற்றம். குணங்கள் பெய்த கொள்கலம் அனையர்—நற்குணங்கள் செறிந்த பேழை (இடம்) அன்னார். சேதி—வீடு; சித்தபதவி; ஜைனர்தம் மோக்ஷ நிலை. நெறி—ஸ்ரீ ஜின தருமம். சிந்தை செய்யா—மனத்தில் நினையாத. சாதுவர்—ஸ்ரீ சாது பரமேட்டிகள்; அவர் ஸ்ரீ பஞ்ச பரமேட்டிகளுள் ஒருவர். ஏ—தேற்றம். சரண்—பாதுகாப்பு.

சிறப்புரை :— "அருந்தவம் தானம் சீலம் அறிவனற் சிறப்பு நான்குந், திருந்திய குணத்தினார்க்குச் சேதிக்கு வீதி யாகும்" (மேரு மந்-729.) (ருசு)

## இளைஞர் இருவரையும் கோயில்முன் நிறுத்தல்.

57. இனையன நினைவை யொரு மிளைஞரை விரைவிற் கொண்டு
தனையர சாளும் பெற்றிச் சண்டனச் சண்ட மாரி
முனைமுக வாயிற் பீட முன்னருய்த் திட்டு நிற்பக்
கனைகழ லரச னையோ கையில்வா ளுருவி னானே.

பொருள்:—கண்டன் தனை ஆளும் அரசு பெற்றி இனையன நினைவு ஐ ஒரும் இளைஞரைகொண்டு விரைவில் அச்சண்டமாரி முனைவாயில் முகம் பீடம் முன்னர் உய்த்திட்டு நிற்ப கனைகழல் அரசன் ஐயோ தன் கையின் வாள் உருவினான் ஏ.

பொழிப்புரை:—சண்ட கருமன் ஆகிய கொலைஞன், தன் தலைவனாகிய அரசனின் ஆணைப்படி மேலே சொல்லியவாறு தம் மனத்தின்கண் நினைந்து நடக்கின்ற அபயருசி, அபயமதி ஆகிய இளைஞர் இருவரையும் பற்றிக்கொண்டு விரைவாகச்சென்று அச்சண்டமாரி தேவியின்கோயில் முதல் வாயிலின் முன்னேயுள்ள பலி பீடத்தின் எதிரில் சேர்த்து நிறுத்தி நின்றான். ஒலிக்கின்ற கழலைக் காலில் அணிந்த மாரிதத்தனாகிய அரசன், அவர்களைக் கொல்லுதற் பொருட்டு அந்தோ! தன் கையால் வாளை உறையினின்றும் எடுத்தான். (என்க.)

குறிப்புரை:—இனையன—மேலே சொல்லியவாறு. நினைவு—மனம். ஐ—சாரியை; உருபுமயக்கம் எனினும் ஆம். ஒரும்—நினைக்கும். பெற்றி—தன்மை; விருப்பம்; ஆணை. முனை—முதல். முகம்—முன். பீடம்—பலிபீடம். முன்னர்—எதிர். உய்த்திட்டு—"ஒரு சொல்"; சேர்த்து. ஐயோ—அந்தோ; இரக்கக் குறிப்புச் சொல். ஏ—அசை. (ருஎ)

## இளைஞரைப் பார்த்து மன்னனை வாழ்த்தச் சொல்லல்.

58. கொலைக்களங் குறுகி நின்றுங் குலுங்கலர் குணங்கடம்மோ
டிலக்கண மமைந்த மெய்ய ரிருவரு மியைந்து நிற்ப
நிலத்திறை மன்னன் வாழ்க நெடிதென வுரைமி னென்றூர்
மலக்கிலா மனத்தர் தம்வாய் வறியதோர் முறுவல் செய்தார்

பொருள்:—"குணங்கள் தம்மொடு இலக்கணம் அமைந்த மெய்யர் இருவரும் கொலைக்களம் குறுகி நின்றும் குலுங்கலர் இயைந்து நிற்ப" என மேல் இரண்டடிகளைக் கொண்டு கூட்டுக.

பொழிப்புரை:—நல்ல குணங்களோடு நல்ல அழகும் அமையப்பெற்ற உடம்பினை உடைய அவ்வபயருசி, அபயமதியாகிய

இருவரும், சண்டமாரி கோயிலின் முன்னுள்ள கொலைக்களத்தினை அடைந்து நின்றும், நடுக்கம் சிறிதும் இல்லாதவர்கள் ஆகியும், ஒத்த கருத்தினை உடையவர்கள் ஆகியும் நின்றார்கள். அவ்வரசன் ஏவலர் அவ்விளைஞர் இருவரையும் பார்த்து, நீங்கள் இந்நாட்டினை ஆளும் அரசன் இந்நிலமிசைப் பலநாள் வாழ்க எனச் சொல்லுங்கள் என்று கூறினார்கள். நடுக்கம் இல்லாத மனத்தினை உடைய அவ்விருவரும் தம் வாயால் இகழ்ச்சி பொருந்திய சிறிய நகை செய்தார்கள்.

குறிப்புரை :—இலக்கணம்—அழகு. மெய்யர்—உடம்பினர். குலுங்கலர் — நடுங்கிலர் இயைந்து — ஒத்து. இறைமன்னன் அரசன்; இருபெயர் ஒட்டு. நெடிது —மிகுதிப் பொருட்டு; பல. வறியது — இகழ்ச்சி பொருந்திய. ஓர் — சிறிது. முறுவல்—நகை. (ருசெ.)

### இளைஞர் அரசனுக்குக் கூறிய வாழ்த்து.

59. மறவியின் மயங்கி வையத் துயிர்களை வருத்தஞ் செய்யா
தறவியின் மனத்தை யாகி யாருயிர்க் கருள் பரப்பிச்
சிறையன பிறவி போக்குந் திருவற மருவிச் சென்று
நிறைபுக ழுலகங் காத்து நீடுவாழ் கென்று நின்றார்.

பொழிப்புரை :—இவ்வரசன், பாபத்துக்கு ஏதுவான பொய்ம் மதங்களில் கலந்து உலகத்து உள்ள உயிர்கட்குத் துன்பஞ் செய்யாமல், ஸ்ரீ ஜின தருமத்தின் (நற்காட்சியின்) பொருந்திய மனத்தை உடையவனாகி உடலிற் பொருந்திய உயிர்கட்கு அருளைச் செய்து உயிரினுக்குச் சிறை போன்ற பிறத்தலாகிய துன்பத்தினின்றும் நீக்கும் ஸ்ரீ ஜின தருமத்தை மேற்கொண்டு ஒழுகி, நிறைந்த புகழை உடையனாய், இந் நாட்டினை ஆண்டு பலநாள் வாழ்க என்று கூறி நின்றார்கள் இளைஞர் இருவரும்.

குறிப்புரை :—உயிர்களை—ஐ—உருபு மயக்கும். மறவியின் —பாபத்தின். அறவியின்—தருமத்தின். ஆர் உயிர்—உடலிற் பொருந்திய உயிர். திருவறம்—ஸ்ரீ ஜின தருமம். மருவி— பொருந்தி; மேற்கொண்டு. சென்று—ஒழுகி. நிறைபுகழ்— வினைத் தொகைத் தொடர்; நிறைந்த புகழ். நீடு—பன்மைப் பொருட்டு, பல. வாழ்கென்று—வாழ்க என்று; விகாரம்.

சிறப்புரை :—ஆர் உயிர்—உடல் முற்றும் நிறைந்த உயிர் என்றும், "தன் உடம்பினதது அளவுமாம்" (மேருமந்-81.) அறி

தலுக்கு அரிய உயிர் எனலும் ஆம். "ஓங்கிய விடங் கோளின் பிளத்தலும் இன்று அமூர்த்தியால்" (மேருமந்-81.) "அறிவோடா லோகம்" என்ற (இந்நூல்-50) பாவை நினைக்க. "தன்னுயிர் தான் பரிந் தோம்பு மாறுபோல், மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல், இன்னுயிர்க் கிறைவனாய் இன்பமூர்த்தியாய்ப், பொன்னுயிராய்ப் பிறந்து உயர்ந்து போகுமே" (சீவகசிந்—3107.) (ருரு)

### வாழ்த்துக் கேட்ட அரசன் தன்நிலையின் தளர்தல்.

60. நின்றவர் தம்மை நோக்கி நிலைதளர்ந் திட்டு மன்னன்
மின்திகழ் மேனி யார்கொல் விஞ்சையர் விண்ணு ளார்கொ
லன்றியிவ் வுருவ மண்மே லவர்களுக் கரிய [1]தென்ன
[2]நின்றவர் நிலைமை தானு நினைவினுக் கரிய தென்றான்.

முன்பாடம்:—தென்ன [2]னின்றவர்.

பொருள்:—மன்னன் நின்றவர் தம்மை நோக்கி நிலை தளர்ந்திட்டு மின்திகழ் மேனியார் விஞ்சையர் கொல் விண்ணுளார் கொல் அன்றி மண் மேல் அவர்கட்கு இவ்வுருவம் அரியது என்ன நின்றவர் நிலைமை தானும் நினைவினுக்கு அரியது என்றான்.

பொழிப்புரை:—அரசன் அவ்வண்ணம் கூறி நின்றவர்களைப் பார்த்து மக்களைப் பலி செய்ய எண்ணியதம் மன உறுதியின் நீங்கி மின்போலும் விளங்குகின்ற உடம்பினை உடையராகிய இவர்கள், வித்தியாதரர்களோ? அன்றித் தேவர்களோ? இவ் வடிவம் மக்கட்கு அமைவது அரியது எனத்தன்னுள் நினைத்து உறுதியுடன் நின்றுள்ள இவர்களின் திண்ணிய பெருமை இத் தகையது என நினைத்தற்கும் அரியது என்று கூறினான்.

குறிப்புரை:—நிலை தளர்ந்திட்டு — மனவுறுதியின் நீங்கி. கொல்—வியப்பிடைச் சொல். (ருசு)

### இளைஞர் அரசனுக்குத் தங்கள் தெளிவைச் செப்பல்.

61 இடுக்கண்வந் துறவு மெண்ணு தெரிசுடர் விளக்கி னென்கொ
னடுக்கமொன் றின்றி நம்பா னருபொருள் கூறு கென்ன
வடுக்குவ தடுக்கு மாறு லஞ்சுதற் பயனின் றென்றே
நடுக்கம தின்றி நின்றாம் நல்லறத் தெளிவு [1]மிக்காம்.

முன்பாடம்:—சென்றும்.

பொருள் :—"இடுக்கண் வந்து உறவும் எண்ணாது எரிசுடர் விளக்கின் நடுக்கம் ஒன்றும் இன்றி நம்பால் நகுபொருள் என் கொல் கூறுகென்ன" எனக் கொண்டு கூட்டுக.

பொழிப்புரை :—அரசன், அவ்விளைஞர் இருவரையும் பார்த்து, உயிர் நீங்குதற்கு ஏதுவான துன்பம் நுங்களைப் பொருந்தியும், நீங்கள், அதன் பொருட்டுச் சிந்தியாதவராய், எரிகின்ற சுடராகிய விளக்குப்போலும், மகிழ்ச்சியால் விளக்கம் உற்று அச்சம் என்பது சிறிதும் இல்லாமல் எம்மைப் பார்த்துச் சிரித்ததன் ஏது என்னை? அதனை நீங்கள் சொல்லுங்கள் என்று கூறினான். அவ்விருவருள் அபயருசி, அரசனைப் பார்த்து, நாங்கள், பண்டைய வினையின் விளைவால் வருவது வந்தே தீரும், அதனால், வரும் துன்பத்தின் பொருட்டு வருந்துவதால் பயன் இன்று என்று, அஞ்சுதல் இல்லாமல் நின்றோம். யாங்கள், ஸ்ரீஜினதருமத்தின் சிறந்த தெளிவைப் (நற்காட்சியைப்) பெற்றோம். அதனால் இவ்வஞ்சாமையை உடையம் என்று கூறினான்.

குறிப்புரை :—கொல்—வினாவிடைச்சொல். பொருள்-ஏது. ஆனால்—அதனால் விகாரம். ஏ, அது—அசை. நல்லறம்—ஸ்ரீஜினதருமம். தெளிவு—நற்காட்சி.

சிறப்புரை :—"இடுக்கண் வந்துற்றகாலை எரிகின்ற விளக்குப் போல, நடுக்கம் ஒன்றுனுமின்றி நகுக தாம் நக்கபோழ்தவ், விடுக்கணை எரியுமெஃகம் இருந்தழுது யாவர் உய்ந்தார்" (சீவக சிந்- 509.) "இடுக்கண் வருங்கால் நகுக அதனை, அடுத்து ஊர்வது அஃது ஒப்பதில்" (திருக்கு-621.) (௬௧)

62\. முன்னுயி ருருவிற் கேத முயன்றுசெய் பாவந் தன்னா
லின்னபல் பிறவி தோறு மிடும்பைக டொடர்ந்து வந்தோ
மன்னுயிர்க் கொலையி னாலிம் மன்னன்வாழ் கென்று மாற்ற
மென்னதாய் விளையு மென்றே நக்கன மெம்மு [1]ளென்றான்.

முன்பாடம் :—[1]ளென்றார்.

பொருள் :—முன் உயிர் உருவிற்கு முயன்று ஏதம் செய் பாவம் தன்னால் பல் பிறவி தோறும் இன்ன இடும்பைகள் தொடர்ந்து வந்தோம் உயிர் மன் கொலையினால் இம்மன்னன் வாழ்கென் மாற்றம் என்னதாய் விளையும் என்று ஏ எம்முள் நக்கனம் என்றான்.

பொழிப்புரை :—முன் ஒரு பிறப்பில் உயிர்பொருந்திய உடற்கு அன்றி, உயிரை உடைய பொருள்போலும் (கோழி

போலும்) ஒரு உருவை மாவினால் செய்து, உயிர் இல்லாததாகிய அதனை, அழித்த பாவத்தினால், பல பிறப்புகள்தோறும் இத்தகைய துன்பங்கள் தொடரப்பட்டு இறந்தோம். உயிர் பொருந்திய இவ்வுடல்களை அழிப்பதனால், இவ்வரசன் வாழ வேண்டும் என்ற சொல்லைக்கேட்டு, இச்செயல், எத்தகைய துன்பத்தினுக்கு ஏதுவாய்முடியும் என்பதனை நினைத்து, யாங்கள் எங்களுள் சிரித்தனம் என்று கூறினான் அபயருசி.

குறிப்புரை :—முயன்று — செய்து. ஏதம்— துன்பம்; அழித்தல். செய் பாவம்—வினைத் தொகைத் தொடர்; செய்த பாவம்—இன்ன — இத்தகைய. இடும்பைகள் — துன்பங்கள். வந்தோம் — சென்றோம்; இறந்தோம். உயிர்மன் — உயிர் பொருந்திய. வாழ்கென்னும்—வாழ்க என்னும்; விகாரம். மாற்றம்—சொல். நக்கனம்—சிரித்தனம்.

சிறப்புரை :—“ சித்திரத்திலும் உருவம் சிதைத்த லாகாது” என்பது முதுமொழி, “ நல்லாறெனப்படுவது யாதெனின் யாதொன்றுங் கொல்லாமை சூழுநெறி” (திருக்கு—323) “ உயிர்ப் பொருள் வடிவு கோறல் உயிர்க் கொலை போலும்” (இந்நூல் 2—சரு—66 செய்.) (ருதெஅ)

இருவர்தம் துணிவைக் கண்ட மக்களின் வியப்பு.

63. கண்ணினுக் கினிய மேனிக் காளைதன் கமல வாயிற்
பண்ணினுக் கினிய சொல்லைப் படியவர் முடியக் கேட்டே
யண்ணலுக் கழகி தாண்மை யழகினுக் கமைந்த தேனும்
பெண்ணினுக் கரசி யாண்மை பேசுதற் கரிய தென்றார்.

பொருள் :—“ சொல்லை கேட்ட படியவர் முடிய” என மொழி மாற்றுக.

பொழிப்புரை :—காணுதற்கு நல்ல வடிவை உடையவனும், காளைப் பருவம் உடையவனும் ஆகிய அபயருசி தன்னுடைய தாமரை மலரின் இதழ் போன்ற செவ்விய இதழ்களை உடைய வாயினால் சொல்லப்பட்ட பண் ஓசையினும் இனியவாகிய சொற்களைக் கேட்ட அவ்விடத்திருந்த மக்கள் யாவரும், அண்ணலுக்கு அழகியதாகிய இவ்வஞ்சாமை அவன் வடிவுக்கு ஏற்றதேயாயினும், அழகாலும் ஒழுக்கத்தாலும் பெண்களுக்கு அரசிபோன்ற இம்மங்கையின் அஞ்சாமைப் பெருமையினைச் சொல்லுதற்கு நமக்கு இயலாது என்று கூறினார்கள்.

குறிப்புரை:—மேனி—வடிவு. காளை—அபயருசி. கமலம்—தாமரைஇதழ்; ஆகுபெயர். ஏ—அசை. படி—இடம். முடிய—யாவரும். ஆண்மை—அஞ்சாமை. அமைந்தது—ஏற்றது. எனும்—ஆயினும். பெண்ணினுக்கரசி — அபயமதி; இம் மங்கை. (௬௩)

அரசன் அவ்விருவர்தம் வருகையின் ஏதுவைக் கேட்டல்.

64. மன்னனு மதனைக் கேட்டே மனமகிழ்ந் தினிய னாகி
என்னைநும் பிறவி முன்ன ரிறந்தன பிறந்து நின்ற
மன்னிய குலனு மென்னை வளரிளம் பருவந் தன்னி
லென்னைநீ ரினைய ராகி வந்தது விளம்பு கென்றான்.

பொருள் :—"இறந்தன என்னை" எனவும், "நீர் வளம் இளம் பருவம்" எனவும், "வந்தது என்னை" எனவும் மொழி மாற்றுக.

பொழிப்புரை :—அரசனும், அபயருசியால் சொல்லப்பட்ட உறுதிச் சொற்களைக் கேட்டு மனத்தில் மகிழ்ச்சியையும், அன்பினையும் உடையனாகி, அவன், அவ்விளைஞனைப் பார்த்து நுங்கள் பிறப்புக்கள் முற்காலங்களில் சென்றன எத்தனை? இன்று பிறந்துள்ள பெருமை பொருந்திய குடியாது? நீங்கள் இவ்விளம் பிராயத்தில் இத்தவ வேடத்தினராகி இந்நகரில் வந்ததன் ஏது யாது? அவற்றைச் சொல்லுவாயாக என்று கூறினான்.

குறிப்புரை :—பிறவி—பிறப்புக்கள். முன்னர்—முற்காலங்களில். இறந்தன—சென்றன. என்னை—எத்தனை. பிறந்து நின்ற—ஒரு சொல்; பிறந்துள்ள. மன்னிய—பெருமைபொருந்திய. குலம்—குடி. என்னை—யாது. நீர்—நீங்கள். இனையர் ஆகி—இத்தவ வேடத்தர்ஆகி. வந்தது—இந்நகரில் வந்தது. என்னை—ஏது யாது. உம், உம்—அசை. (௬௪)

அரசன் வினவிற்கு அபயருசியின் விடை.

65. அருளுடை மனத்த ராகி யறம்புரிந் தவர்கட் கல்லால்
மருளுடை மறவ ருக்கென் வாய்மொழி மனத்திற் சென்று
பொருளியல் பாகி நில்லா புரவல கருதிற் றுண்டே
[1]யருளில செய்து செய்க வாகுவ தாக வென்றான்.

முன்பாடம் :—[1]யருளியல்.

பொருள் :—என் வாய்மொழி அருளுடை மனத்தர் ஆகி அறம் புரிந்த அவர்கட்கு அல்லால் மருளுடை மறவருக்கு மனத்தின் சென்று பொருள் இயல்பு ஆகி நில்லா, எனக்கொண்டு கூட்டுக.

பொழிப்புரை:—என்னுடைய வாயினின்றும் வருஞ்சொற்கள், எல்லா உயிர்கள் இடத்தும் அன்பு பொருந்திய மனத்தர் ஆகி, ஸ்ரீஜினதருமத்தில் ஒழுகியவர்கட்கு அல்லாமல், அஞ்ஞானத்தை உடைய கொலைஞரின் மனத்தினை அடைந்து, பாதுகாக்கப் படும் பொருள்களின் பண்பினைப் பெற்று நிலைத்து நிற்காவாம். அரசனே! நீ, எண்ணியபடி உயிர்களிடத்து அருளற்றதாகிய செயலைச் செய்து செல்வாயாக. மேல் நடக்கத்தக்கது நடக்கட்டும் என்று கூறினான்.

குறிப்புரை :—மருள்—மயக்கம்; அஞ்ஞானம். மறவர்—கொலைஞர். கருதிற்றுண்டு—ஒருசொல்; கருதிய; எண்ணிய படி. ஏ—அசை. அருளிலசெய்து—கொலைசெய்து. ஆகுவது—நடக்கத்தக்கது. ஆக—ஆகுக; விகாரம்; நடக்கட்டும். (அருளியல் எனக் கொள்ளின், அருளி-இ-பகுதிப் பொருள் விகுதி, அல்—அற்ற, எனக்கொள்ளுக.) (௬௫)

அரசன் அவ்விருவரின் பிறப்பையும் துன்பத்தையும் கேட்டல்.

66. அன்னண மண்ணல் கூற வருளுடை மனத்த னாகி
மன்னவன் தன்கை வாளு மனத்திடை மறனு மாற்றி
என்னினி யிறைவ [1]னீயே யென மொழிந் திறைஞ்சி நின்று
பன்னுக குமர நுங்கள் பவத்தொடு பரிவு மென்றான்.

முன்பாடம் :—[1]நீயே யெனக் கென விறைஞ்சி.

பொருள் :—அன்னணம் அண்ணல் கூற மன்னவன் அருளுடை மனத்தன் ஆகி தன்கை வாளும் மனத்திடை மறனும் மாற்றி இனி என் இறைவன் நீயே என மொழிந்து இறைஞ்சி நின்று குமர நுங்கள் பவத்தொடு பரிவும் பன்னுக என்றான்.

பொழிப்புரை :—மேல் கூறியபடி, அபயருசியால் கூறப் பட்டவற்றைக் கேட்ட மாரிதத்தனாகிய அரசன், அன்பு பொருந்திய மனத்தன் ஆகி அவ்விளைஞர் இருவரையும் கொல்லுதற் பொருட்டுத் தன்கையில் பற்றிய வாளையும், மனத்தில் எண்ணிய கொலைச் செயலையும் நீக்கி அபயருசியைப் பார்த்து, எனக்கு இன்று முதல் ஆசிரியன் நீயே என்று சொல்லி அவனை வணங்கி நின்று, இளைஞனே! நுங்கள் முற்பிறப்புக்களையும், அப்பிறப்புக்களில் நீங்கள் அடைந்த துன்பங்களையும், யான் அறியச் சொல்லுவாயாக என்று கூறினான்.

குறிப்புரை :—அன்னணம்—மேற்கூறியபடி. அண்ணல்—அபயருசி. மறம்—கொலைச்செயல். என்—எனக்கு. இனி—இன்றுமுதல். இறைவன்—ஆசிரியன். இறைஞ்சி—வணங்கி.

குமர—ஆண்மைவிளி; இளைஞனே. பன்னுக—சொல்லுவா யாக. பவம்—பிறப்பு. பரிவு—துன்பம். (கூஉ)

சிறப்புரை:—“என்றனக் கிறைவன் நீயே” (மேருமந்-989)

அபயருசி அரசனுக்குத் தம் பிறப்புக் கூறல்.

67. மின்னொடு தொடர்ந்து மேக மேதினிக் கேத நீங்கப்
பொன்வரை முன்னர் நின்று புயல்பொழிந் திடுவ [1]தேபோ
[2]லன்னமேன் னடைய [3]ளளினருகணைந் துருகும் வண்ண
மன்னவன் குமரன் மன்னற் கறமழை பொழிய லுற்றான்.

முன்பாடம்:—[1]தேபோல். [2]அன்னமேன். [3]ளளுமருகணைந்.

பொருள்—மேதினிக்கு ஏதம் நீங்க மேகம் மின்னொடு தொடர்ந்து பொன்வரை முன்னர் நின்று புயல் பொழிந்திடு வதே போல் குமரன் அன்ன மென் நடை அளளின் அருகு அணைந்து மன்னவன் உருகும் வண்ணம் மன்னற்கு அறமழை பொழியல் உற்றான்.

பொழிப்புரை:—உலகில் உள்ள உயிர்களின் துன்பங்கள் நீங்கும் பொருட்டு, மேகம், மின்னலோடுகூடி பொலிவினை உடைய மலையின் உச்சியில்தங்கி, நீரைப் பொழிவதுபோல், அபயருசி, அன்னத்தின் மெல்லிய நடைபோன்ற நடையினை உடையாள் ஆகிய தன் தங்கையாகிய மின்னற்கொடிபோன்ற அபயமதியின் பக்கத்தே நின்று, மாரிதத்தனாகிய அரசனின் வலிய பார்போன்ற திண்ணிய மனம், மகிழ்ச்சியால் கரையும்படி அம்மன்னனுக்கு தன் பிறப்பாகிய (ஸ்ரீஜின தருமமாகிய) நீரைப் பொழியலுற்றான்.

பொழிப்புரை:—மேதினி—பூமி. உலகு—உயிர்; ஆகு பெயர். ஏதம்—துன்பம். தொடர்ந்து—கூடி. புயல்—நீர். பொன்—பொலிவு. வரை—மலை. முன்னர்—உச்சி. நின்று—தங்கி. மன்னவன்—அரசன் மனம்; ஆகுபெயர். குமரன்—அபயருசி. அன்னமென்னடையளள்—அபயமதி; அபயருசி யின் தங்கை.

சிறப்புரை:—“மின்னொடு தொடர்ந்து மேகம் வேடிபட விடித் துத் தோன்றிப், பொன்மலை தன்னைச் சூழ்ந்து புயலின் பொழிவதே போல்” (மேருமந்—160.) “சோர்வில் மாதவன் சூழ்சுத கேவலி, தாரகை நடுச் சந்திரன் போல்பவன், கார் பயிர்க் குதவும் படி யால் உயிர்க், கார்வ மின்றி யறத்தை யளிக்குமே” (மேருமந்—1115.) “மறமலி மன்னனை நோக்கி மற்றவற்கு அறமழை பொழிவ தோர் ஆர்வம் எய்தினர்” (சூளா-இரத-73.) (கூ௩)



(தொடரும்.)

# கூத்தராற் குறிக்கப்பெற்ற சில தலைவர்கள்.

திரு. T. V. சதாசிவப்பண்டாரத்தார் அவர்கள்,
தமிழாசிரியர், வாணுதுறை உயர்தரக் கல்லூரி, கும்பகோணம்.

## I

கவிஞர் பெருமானாகிய ஒட்டக்கூத்தர், விக்கிரமசோழன் இரண்டாம் குலோத்துங்கசோழன், இரண்டாம் இராசராச சோழன் ஆகிய மூவேந்தர்களது ஆட்சிக்காலங்களிலும் அன்னோரது அவைக்களப் புலவராக விளங்கிய பெரியார் என்பது யாவரும் அறிந்ததொன்றாம். அவ்வேந்தர்கள்பால் அமைச்சர்களாகவும் படைத்தலைவர்களாகவும் பிற அதிகாரிகளாகவும் திகழ்ந்து நாட்டிற்கு நலம் புரிந்தவர்கள் பலர் ஆதல்வேண்டும். அவர்களது வீரச்செயல்களும் கொடைச்சிறப்பும் அருந்தொண்டுகளும் நம் தமிழகத்திலுள்ள கோயில்களில் காணப்பெறும் கல்வெட்டுக்களால் இன்றும் அறியக் கிடக்கின்றன. அவர்களது வள்ளன்மையால் மாண்புடன் வாழ்ந்துவந்த புலவர் பெருமக்கள் அன்னோரைப் பாராட்டிப் பாடியுள்ள பல பிரபந்தங்களும் இருந்திருத்தல் வேண்டும் என்பது திண்ணம். வச்சத்தொள்ளாயிரம், அரும்பைத்தொள்ளாயிரம், புதுவைக் காங்கேயன் நாலாயிரக்கோவை, செஞ்சிக்கலம்பகம், வங்கர் கோவை, அரையர்கோவை முதலியன இவ்வகையைச் சேர்ந்தனவேயாம். இப்போது இவை கிடைக்கவில்லையாயினும் அம் முடி மன்னர்கள்மீது பாடப்பெற்ற சில பிரபந்தங்கள் இந் நாளில் கிடைத்துள்ளமை ஓரளவு ஆறுதல் அளிக்கின்றது. அத்தகைய பிரபந்தங்களுள் விக்கிரமசோழன் உலாவும் ஒன்றாகும். இதனை இயற்றியவர் கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் ஆவர். இது முதற் குலோத்துங்க சோழன் புதல்வனாகிய விக்கிரமசோழன்மீது பாடப்பெற்றது. இவ் வேந்தன், படைத்தலைவர், அமைச்சர், குறுநிலமன்னர், மண்டலிகர் முதலானோர் இருமருங்கும் சூழ்ந்துவர உலாப்போந்தான் என்று அந்நூலில் கூத்தர் கூறியுள்ளனர்; அங்ஙனம் கூறுமிடத்துச் சில அரசியல் தலைவர்களின் பெயர்களை நிரல்பட வைத்து அன்னோரது வீரச்செயல்களையும் பெருமைகளையும்

மிகப்பாராட்டிச் செல்கின்றனர். அவர்கள், கலிங்கம் வென்ற தொண்டைமான், முனையர்கோன், சோழகோன், மறையோன் கண்ணன், வாணன், காலிங்கர்கோன், செஞ்சியர்கோன் காடவன், வேணாடர் வேந்து, அநந்தபாலன், வத்தவன், சேதி நாடன், காரானை காவலன், அதிகன், வல்லவன், திரிகர்த்தன் என்போர்.

இதனை,

—முன்னங்

குலையப் பொருதொருநாட் கொண்ட பரணி
மலையத் தருந்தொண்டை மானும்—பலர் முடிமேல்
ஆர்க்குங் கழற்கா லனகன் றனதவையுள்
பார்க்கு மதிமந்திர பாலகரிற்—போர்க்குத்
தொடுக்குங் கமழ்தும்பை தூசிநெடுஞ் சூடிக்
கொடுக்கும் புகழ்முனையர் கோனும்—முடிக்கரையுங்
கங்கரையு மாராட் டரையுங் கலிங்கரையும்
கொங்கரையு மேனைக் குடகரையுந்—தங்கோன்
முனியும் பொழுது முரிபுருவத் தோடு
குனியுஞ் சிலைச் சோழகோனும்—சனபதிதன்
தோளுங் கவசமுஞ் சுற்றமுங் கொற்றப் போர்
வாளும் வலியு மதியமைச்சு—நாளுமா
மஞ்சைக் கிழித்து வளரும் பெரும் புரிசைக்
கஞ்சைத் திருமறையோன் கண்ணனும்—வெஞ்சமத்துப்
புல்லாத மன்னர் புலாலுடம்பு பேய்வாங்க
ஒல்லாத கூற்ற முயிர்வாங்க—புல்லார்வந்
தாங்கு மடமகளிர் தத்தங் குழைவாங்க
வாங்கும் வரிசிலைக்கை வாணனும்—வேங்கையினும்
கூடார் விழிஞத்துங் கொல்லத்துங் கொங்கத்தும்
ஓடா விரட்டத்து மொட்டத்தும்—நாடா
தடியெடுத்து வெவ்வே றரசிரிய வீரக்
கொடியெடுத்த காலிங்கர் கோனும்—கடியாணச்
செம்பொற் பதணச் செறியிஞ்சிச் செஞ்சியர்கோன்
கம்பக்களியானைக் காடவனும்—வெம்பிக்
கலக்கிய வஞ்சக் கலியாணர் போரில்
விலக்கிய வேணாடர் வேந்துந்—தலைத்தருமம்
வாரிக் குமரிமுதன் மந்தாகினியளவும்
பாரித் தவனனந்த பாலனும்—பேரமரின்
முட்டிப் பொருதார் வடமண்ணை மும்மதிலு
மட்டித்த மால்யானை வத்தவனு—மட்டையெழக்
காதிக் கருநாடர் கட்டரணங் கட்டழித்த
சேதித் திருநாடர் சேவகனும்—பூதலத்து

மூட்டிய தெவ்வர் சடைகட்ட மொய்கழல்
கட்டிய காரானை காவலனும்—ஒட்டிய
மான வரச ரிரிய வடகலிங்கத்
தானை துணித்த அதிகனும்—மீனவர்தங்
கோட்டாறுங் கொல்லமுங் கொண்ட கொடைநுளம்பன்
வாட்டார் மதயானை வல்லவனு—மோட்டரணக்
கொங்கைக் குலைத்துக் குடகக் குவடொடித்த
செங்கைக் களிற்றுத் திகத்தனும்...........
..........................................................
..........................................................
என்னும் பெரும்போர் இகல்வேந்தர் மண்டலிகர்
முன்னு மிருமருங்கு மொய்த்தீண்ட——"

என்னும் விக்கிரம சோழனுலாவடிகளிற் காண்க.

இதில் குறிக்கப்பெற்ற தலைவர்கள் எல்லோரும் விக்கிரம சோழன் ஆட்சிக்காலத்தில் விளங்கியவர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவர்களைப் பற்றி இந்நூலால் அறியக்கூடியது இவ்வளவேயாகும். ஆயினும், விக்கிரமசோழன் காலத்திய கல்வெட்டுக்களின் துணைகொண்டு அவர்களைப் பற்றிய செய்திகளை நாம் ஆராய்தல் அமைவுடையதேயாம்.

இனி, இவ்வுலா எழுதப்பெற்ற காலத்தை ஒருவாறு உய்த்துணர்வதற்கு இடமுண்டு. இவ்வுலாவிற் குறிக்கப் பெற்ற தலைவர்களுள் காலிங்கர்கோன் என்பானும் ஒருவன் என்பது மேலே காட்டியுள்ள பகுதியினால் நன்கு விளங்கும். இவன் மணவிற்கூத்தனை காலிங்கராயன் எனவும் அரும்பையர்கோன் எனவும் அரும்பாக்கிழான் எனவும் வழங்கப்பெற்றனன் என்பது கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. இவன், முதற் குலோத்துங்க சோழனது படைத்தலைவர்களுள் ஒருவனாக விளங்கியதோடு விக்கிரமசோழனது ஆட்சியின் முற்பகுதியிலும் அத்தகைய உயர்நிலையிலிருந்துள்ளனன். அதுபற்றியே, கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரும் இத்தலைவனைத் தாம் பாடிய உலாவில் உரிய இடத்தில் வைத்துப் பாராட்டுவாராயினர். இவனது கல்வெட்டுக்கள் விக்கிரமசோழனது ஆட்சியின் ஆறும் ஆண்டிற்குப் பின்னர் நம் நாட்டில் காணப்படவில்லையாதலின் அவ்வாண்டிற்குப்பிறகு இத்தலைவன் இருந்திலன் என்பது ஒருதலை. ஆகவே, இக்காலிங்கர் கோனைச்சிறப்பித்துக் கூறும் இந்த உலாவும் அச்சோழமன்னனது ஆட்சியின் ஆறும் ஆண்டிற்கு முன்னரே பாடப்பெற்றிருத்தல் வேண்டுமென்பது

திண்ணம். விக்கிரமசோழன் கி. பி. 1118 முதல் 1136 முடிய பதினெட்டு ஆண்டுகள் ஆட்சிபுரிந்தனன் என்பது கல்வெட்டுக்களால் அறியப்படும் செய்தியாகும். எனவே, விக்கிரமசோழனது ஆட்சியின் ஆறும் ஆண்டாகிய கி. பி. 1124-க்கு முன்னரே விக்கிரமசோழனுலா இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்பது நன்கு துணியப்படும். இனி, அத்தலைவர்களைப் பற்றிய செய்திகளை ஆராய்வோம்.

**1. தொண்டைமான்:**—இவன் கலிங்கம் வென்ற கருணாகரத் தொண்டைமானே யாவன் என்பது 'பரணி மலையத் தருந் தொண்டைமான்' என்ற சொற்றொடர்களால் பெறப்படுகின்றது. இவன் உலா இயற்றப்பெற்றகாலத்தில் அரசியல் துறையிலிருந்து விலகியிருத்தல் வேண்டுமென்பது உய்த்துணரப்படுகின்றது. விக்கிரமசோழனது ஆட்சியில் அமைச்சுரிமை பூண்டு அரசியல் நடத்திவந்த தலைவர்களைக் கூறத் தொடங்கிய கவிஞர் பெருமான், கருணாகரத் தொண்டைமானை முதலில் தனியாக வைத்துப் பாராட்டியிருப்பது ஆராய்தற்குரியதாகும். ஆகவே, இந்நாளில் ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அரசாங்க அலுவல்களினின்றும் நீங்கி ஓய்வு பெற்றிருப்பாரைப்போல் இக்கருணாகரத் தொண்டைமானும் உலா இயற்றப்பெற்ற காலத்தில் அரசியல் துறையினின்றும் விலகி ஓய்வுற்றநிலையில் இருந்திருத்தல் வேண்டுமென்பது தெள்ளிது. இவன் முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் சிறந்த தலைவனாக விளங்கியவன். அவ்வேந்தனது ஆட்சியின் பிற்பகுதியில் இவன் முதலமைச்சனாகவும் படைத்தலைவனாகவும் இருந்தவன். இவனது கலிங்க வெற்றியைப் பாராட்டித்தான் கலிங்கத்துப்பரணி என்னும் நூல் முதற்குலோத்துங்க சோழன்மீது கவிச்சக்கரவர்த்தியாகிய சயங்கொண்டாரால் பாடப்பெற்றது. அந்நூல், இவனை, 'அபயன் மந்திரி முதல்வன்' எனவும் 'வண்டையரரசன் அரசர்கள் நாதன் மந்திரி உலகுபுகழ் கருணாகரன்' எனவும் 'கலிங்கப்பரணி நம் காவலனைச் சூட்டிய தோன்றல்' எனவும் 'தொண்டையர் வேந்தன்' எனவும் புகழ்தல் காண்க. இவன், கருணாகரன் என்னும் பெயரினன்; தொண்டைமான் என்னும் பட்டம் பெற்றவன்; பல்லவர் தோன்றல்; ஒப்பற்ற வீரமும் ஆற்றலும் படைத்தவன்; தமிழர்களது வீரச் செயல்களைப் பிறநாட்டினர் உணரச்செய்தவன்; சோழமண்டலத்தில் நாச்சியார் கோயிலுக்குத் தெற்கேயுள்ளதும் வண்டுவாஞ்சேரி என்று இந்நாளில் வழங்கப்படுவதுமாகிய வண்டாழஞ்சேரி என்னும் ஊரில் வாழ்ந்தவன். இவனது மனைவியார் அழகிய

மணவாளனி மண்டையாழ்வார் எனப்படுவர். இவ்வம்மையார் காஞ்சியிலுள்ள அருளாள பெருமாளுக்கு நுந்தாவிளக்கு ஒன்று வைத்துள்ளமை ஒரு கல்வெட்டால் புலப்படுகின்றது. அஃதில தேல் இவனைப்பற்றிய சில செய்திகள் மறைந்தொழிந்திருக்கு மென்பது திண்ணம். அக்கல்வெட்டை அடியிற் காண்க.

"ஸ்வஸ்திஸ்ரீ கோஇராஜகேசரிவன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு நாற்பத்து மூன்று. ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்து எயில்நாட்டுத் திருவத்தியூர் ஆழ்வார்க்குச் சோழமண்டலத்துக் குலோத்துங்க சோழவளநாட்டுத் திருநறையூர்நாட்டு வண்டாழஞ்சேரியுடையான் வேளான கருணாகரனான தொண்டைமானார் தேவியார் அழகிய மணவாளனி மண்டையாழ்வார்வைத்த திருநுந்தா விளக்கு.............................................................(S. I. I. Vol. IV. No. 862)

**2. முனையர்கோன் :—** இவன் விக்கிரமசோழனது அமைச்சர்களுள் ஒருவன். இவனைப்பற்றிய செய்திகள் இதுகாறும் அச்சிடப்பெற்று வெளிவந்துள்ள கல்வெட்டுக்களில் காணப்படவில்லை. இவன் முனையரையன், முனையதரையன் என்றபட்டங்களுள் ஒன்றைப் பெற்றவனாதல்வேண்டும்.

**3. சோழகோன் :—** இவன் விக்கிரம சோழனது அமைச்சனும் படைத்தலைவனுமாக விளங்கியவன். இவன் அரசனால் கொடுக்கப்பட்ட 'சோழகோன்' என்ற பட்டம் பெற்றவன். இவனது இயற்பெயர் பூபாலசுந்தரனென்பது. இவனது மனைவியார் கற்பகம் இராசேந்திர சோழியார் என்பவர். இவ்வம்மையார் கி. பி. 1115ல் கொள்ளிடத்தின் வடகரையில் திருமழபாடியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்குத் திருநுந்தாவிளக்கு ஒன்றுவைத்து அதற்காகத் தொண்ணூறு ஆடுகள் வாங்கிவிட்டனர் என்று அக்கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. இதனால் இச்சோழகோன் முதற் குலோத்துங்க சோழன் ஆட்சியிலும் அரசியல் அதிகாரிகளுள் ஒருவனாக இருந்திருத்தல் வேண்டுமென்பது தேற்றம். இவன் கங்கர், மகாராட்டிரர், கலிங்கர், கொங்கர், குடகர் முதலானோரைப் போரில் வென்று வாகை சூடியவன் என்பது விக்கிரமசோழன் உலாவினால் அறியப்படுகின்றது. இவனைப்பற்றிய பிறசெய்திகள் தெரியவில்லை. இவன் மனைவியார் திருமழபாடி எம்பெருமானுக்கு நுந்தா விளக்கு வைத்த செய்தியை யுணர்த்தும் கல்வெட்டின் ஒரு பகுதியைக் கீழே காண்க.

"ஸ்வஸ்தி ஸ்ரீ புகழ்மாது விளங்க ஜயமாது விரும்ப நில மகள் வளர மலர் மகள் புணர உரிமை சிறந்த மணி முடி சூடி மீனவர் நிலைகெட வில்லவர் குலைதர ஏனை மன்னவர் இரிய லுற்றிழிதரத் திக்கனைத்துந்தன் சக்கர நடாத்தி வீரசிம்மா சனத்து உலகுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோவிராஜ கேசரிவன்மரான சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு சாடு-ஆவது தியாகவல்லி வளநாட்டுப் பொய்கை நாட்டு உடையார் திருமழுவாடி உடைய மகா தேவர்க்கு இரவு பகல் சந்திராதித்தவல் திருநுந்தாவிளக்கு எரியக்கடவதாக வைத்தார் பூபாலசுந்தரனான சோழகோனார் தேவியார் இராசேந்திர சோழவளநாட்டு வண்டாழைக் கூற்றத்துச் சிற்றூமூர் சிற்றூமூர் உடையான் பெருமாள் கற்பக மான களப்பாளராஜர் மகள் கற்பகம் இராஜேந்திர சோழியார் யாண்டு சாடு-ஆவது நாள் உாசுடு முதல் வைத்த திருநுந்தா விளக்கு ஒன்றுக்கும் விட்ட செவரி ஆடு கூ0"—(S. I. I. Vol. V. No. 640.)

4. **மறையோன் கண்ணன்**:—இவன் விக்கிரம சோழனது அமைச்சர்களுள் ஒருவன்; மறையவர் குலத்தினன்; கண்ணன் என்னும் பெயரினன்; பெரும் புரிசை சூழ்ந்த 'கஞ்சை'* என்னும் ஊரில் வாழ்ந்தவன். 'கஞ்சை' என்பது கஞ்சனூர், கஞ்சாறு என்ற பெயர்களின் மரூஉ வாதல் வேண்டும். கஞ்ச னூர் என்பது காவிரியாற்றின் வடகரையிலுள்ள பாடல்பெற்ற ஒரு சைவத்திருப்பதியாகும். கஞ்சாறு என்பது அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான மானக்கஞ்சாற நாயனார் வாழ்ந்து முத்தி எய்திய தலம். இஃது இந்நாளில் ஆனந்த தாண்டவபுரம் என்று வழங்கப்படும் புகைவண்டி நிலையமாகும். இவ்விரண்டு ஊர்களினும் சோழமன்னர்களது அரசியல் அதி காரிகளுள் சிலர் முற்காலத்தில் இருந்தனர் என்பது சில கல் வெட்டுக்களால் தெரிகின்றது. இவ்விரண்டனுள் மறையோன் கண்ணன் எவ்வூரினன் என்பது புலப்படவில்லை. வெளி வந் துள்ள கல்வெட்டுக்களும் இவனைப்பற்றி ஒன்றும் உணர்த்த வில்லை.

---

* "..................................................கூந்தலரிந்தளித்தான் மலைசெய் மதிற்கஞ்சை மானக்கஞ் சாறன் எனும் வள்ளலே" என்னும் திருத்தொண்டர் திருவந்தாதிப் பாடலடியினால் கஞ்சாறு என்பது கஞ்சை என்று வழங்கப் பெற்றமை அறிக.—(திருத்தொண்டர் திருவந்தாதி—பாடல் 13.)

**5. வாணன் :—** இவன் முதற்குலோத்துங்க சோழனது ஆட்சியின் பிற்பகுதியிலும் விக்கிரம சோழனது ஆட்சியின் முற்பகுதியிலும் நிலவிய படைத்தலைவன் ; வாணர் மரபினன் ; வாணகப்பாடி நாட்டினன் ; விருதராஜ பயங்கரவாண கோவரையன் என்ற பட்ட மெய்தியவன் ; கருணாகரத் தொண்டைமானோடு கலிங்கப் போர்க்குச் சென்று புகழ் படைத்தவன். அது பற்றிக் கலிங்கத்துப் பரணியில் ஆசிரியர் சயங்கொண்டாரால் பாராட்டப் பெற்றவன். இதனை,

'வாசிகொண் டரசர் வார ணங்கவர
வாணகோ வரையன் வாண்முகத்
தூசிகொண்டு முடிகொண்ட சோழனொரு
சூழிவே ழமிசை கொள்ளவே' என்னும்

தாழிசையால் அறியலாம்.

கி. பி. 1124-ல் இவ்வாண கோவரையன் கண்டராதித்தச் சதுர்வேதி மங்கலத்திற்கு அண்மையிலுள்ள வாணவிச்சாதர நல்லூர் முடிகொண்ட சோழேச்சுர முடைய மகாதேவர்க்கு நாள் வழிபாட்டிற்கும் பிறவற்றிற்கும் நிபந்தமாக மூன்றேகால் வேலி நிலம் இறையிலியளித்த செய்தியை யுணர்த்தும் கல்வெட்டு ஒன்று கீழைப்பழுவூரிலுள்ள கோயிலில் வரையப்பட்டுளது. அதனை அடியிற் காண்க.

"ஸ்வஸ்தி ஸ்ரீ விக்கிரமசோழதேவர் யாண்டு ஆறுவது வாணகோவரையர்களில் சுத்தமல்லன் முடிகொண்டானான விருதராஜபயங்கர வாணகோவரையனேன் ஸ்ரீ கண்டராதித்த சதுர்வேதிமங்கலத்து வேறு பிரிஞ்சூர்க்காணியான வாகுமை வாண விச்சாதர நல்லூர் முடிகொண்ட சோழேச்சுரமுடைய மகாதேவர்க்கு போது நாநாழி அரிசியாக மூன்று சந்திக்கும் உட்பட தயிரமுதும், நெய்யமுது, கறியமுது, அடைக்காயமுது உட்பட நிசதம் நெல் தூணியும் மாண் மூன்றுக்கு நெல் நிசதம் குறுணியாக மாண் இரண்டுக்கு நெல் பதக்கும் சந்திவிளக்கெரிக்க நெய் உழக்குக்கும் நிசதநெல் குறுணியும் திருமஞ்சனம் வைக்கும் திருச்சிற்றம்பலப் பிச்சனுக்கு நெல் குறுணியும் நந்தவானம் செய்வானுக்கு நெல் அறு நாழியும் நித்த நிபந்தம் சந்திராதித்தவல் செல்வதாக நான் இறையிலிவிட்ட நிலமாவது வேட்டபற்குடி எல்லைக்குத் தெற்கும் தேவி கோயிலுக்கு மேற்கும் விட்ட நிலம் முக்காலும் இதற்குத் தெற்கு ஊருக்கு மேற்கு குழலுடையான் பற்று உட்பட நிலம் அரை வேலியும் தெற்கில் குளத்தின் கீழ்கரைநிலத்தில் கீழ்வாரி வாய்க்காலுக்குக்

கிழக்கு வார்மடைக்கு மேற்கு நாலாங் கண்ணாற்றுக்குத் தெற்கு ராஜேந்திர சோழப்பேராற்றுக்கு வடக்கு நிலம் ஒரு வேலியும் குளத்தில் இடைக்கட்டுக்குக் கிழக்கு சுடுகாட்டுக்குத் தெற்கு புஞ்சை நிலம் ஒருவேலியும் ஆக நிலம் மூன்றேகாலும் இறையிலியாக சந்திராதித்தவல் செல்ல நீர்வார்த்துக் கல் வெட்டிக் கொடுத்தேன் சுத்தமல்லன் முடிகொண்டானான விருதராஜபயங்கர வாண கோவரையனேன்"—(S. I. I. Vol. V. No. 673)

6. **காலிங்கர்கோன்**:—இவன் தொண்டை மண்டலத்தி லுள்ள இருபத்து நான்கு கோட்டங்களுள் ஒன்றாகிய மணவிற் கோட்டத்து மணவில் என்ற ஊரின் தலைவன். இவன் முதற் குலோத்துங்கசோழன் விக்கிரமசோழன் ஆகிய இருவரது ஆட்சிக் காலத்திலும் படைத் தலைவனாக இருந்தவன் என்பது முன்னரே விளக்கப்பட்டது. இவன் குலோத்துங்க சோழன் வேணாடு, மலைநாடு, வடநாடு முதலியவற்றோடு நிகழ்த்திய போர் களில் படைத் தலைமைபூண்டு வெற்றியெய்தி அதனால் தன் அரசனுக்குப் பெரும் புகழை யுண்டு பண்ணியவன்; பொன் னம்பலக் கூத்தன், அருளாகரன், அரும்பாக்கிழான் முதலான பெயர்களையுடையவன்; அரசனால் அளிக்கப்பெற்ற காலிங்க ராயன் என்ற பட்டம் உடையவன்; சிவபத்திச் செல்வம் வாய்க் கப்பெற்றவன்; தில்லையம்பதியிலும் திருவதிகை வீரட்டானத் திலும் திருப்பணிகள் புரிந்து பல நிபந்தங்கள் விட்டவன்; சமய குரவர்கள் அருளிய தேவாரப் பதிகங்களைச் செப்பேடுகளில் எழுதுவித்துத் தில்லையம்பலத்திற் சேமித்து வைத்தவன். இவன் கோயில்களுக்குத் திருப்பணி புரிந்ததையும் நிபந்தங்கள் விட்டதையும் அறிவிக்கும் கல்வெட்டுக்கள் பல உண்டு. அவற் றுள் ஒன்று அடியில் வருமாறு:—

"ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு ௩௰௪-ஆவது மலாடான ஜனநாதவள..............திருக்கோவலூர் ...........................கொண்..............................ல் அரும்பாக்கிழான் ஸ்ரீமதுராந்தகன் பொன்னம்பலக் கூத்தனான காலிங்கராஜனேன் இத்திருக்கோவலூரான மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து சபையார் பக்கல் நான் விலைகொடுத்துக் கொண்டுடைய தெங்கந் தோட்டந் திருவீரட்டான முடையார்க்குத் திருநந்தா வனமாக நான் விட்டுக் கொண்டு" ............ (எஞ்சிய பகுதி சிதைந்து போயிற்று)—S. I. I. Vol. VII 892.

**7. செஞ்சியர்கோன் காடவன் :—** இவன் செஞ்சியின்கண் வாழ்ந்த ஒரு குறுநில மன்னன். காடவன் என்பது பல்லவனைக் குறிக்கும் ஒரு பெயராகும். இவ்வுண்மையைக் 'காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்குமடியேன்' என்னும் திருத்தொண்டத் தொகை யடியாலும், 'ஐயடிகள் காடவர் கோனாயனார்' என்னும் பெயராலும் உணரலாம். பல்லவர்கள், காடவர்கள் எனவும் வழங்கப் பெற்றனர் என்று துப்ரேல் துரைமகனார் தமது பல்லவர் சரித்திரத்தில் கூறியிருப்பது ஈண்டு அறியத்தக்கது.* எனவே, இத்தலைவன் பல்லவர் மரபினன் என்பது வெளியாதல் காண்க. விக்கிரம சோழனது ஆட்சியின் பதினொன்றாம் ஆண்டாகிய கி. பி. 1129-ல் கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் உள்ள ஆலங்குடியில் வரையப்பெற்றுள்ள கல்வெட்டொன்றில்† அவ்வேந்தன் காலத்திய அதிகாரிகளுள் சிலர் குறிக்கப்பெற்றுள்ளனர். அவர்களுள் செஞ்சி நாங்கொற்றன் ஆடவல்லான் கடம்பனும் ஒருவன் ஆவன். ஆகவே, ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழனுலாவில் கூறியுள்ள செஞ்சியர்கோன் காடவனும் ஆலங்குடிக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ள செஞ்சிநாங்கொற்றனும் ஒருவனேயாதல் வேண்டும்.

இனி, புகழேந்திப்புலவர் செஞ்சியின் கண் வாழ்ந்த ஒரு குறுநிலமன்னன்மீது செஞ்சிக்கலம்பகம் என்ற பிரபந்தம் பாடியுள்ளனர் என்பது,

"காரார் களந்தைப் புகழேந்தி சொன்ன கலம் பகத்தி
னோராது நையும் படியென்ற பாடலின் நேரியர் கோன்
சீராகச் செப்பிய நற் பாடல் கொண்டவன் செஞ்சியர்கோன்
மாராபிராமனங் கொற்றந்தையூர் தொண்டைமண்டலமே"

என்னும் படிக்காசுப் புலவரது தொண்டை மண்டல சதகச் செய்யுளால் அறியக்கிடக்கின்றது. அக்கலம்பகம் இக்காலத்திற் கிடைக்கவில்லையாயினும் அதில் ஒரு பாடல் மாத்திரம் படிக்காசுப் புலவரால் மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ளது. அது

"நையும் படியே நாங்கொற்ற நங்கோன் செஞ்சிவரைமீதே
யையம்பெறு நுண்ணிடை மடவா யகிலின் தூபமுகிலன்று
பெய்யுந்துளியோ மழையன்று பிரசத்துளியே பிழையாது
வையம் பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை நாட்டாரே"

என்பதாம். விக்கிரமசோழன் காலத்திய ஆலங்குடிக் கல்வெட்டி

---

* The Pallavas-by J. Dubreuil page 69.

† S. I. I. Vol. V No. 458.

னால் அறியப்பட்ட செஞ்சியின் தலைவன் காங்கோற்றன் என்பவனே புகழேந்தியாரது செஞ்சிக்கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவனாக அமைந்திருப்பது இக்கலம்பகப் பாடலால் நன்கு விளங்குதல் காண்க. எனவே, புகழேந்தியாரால் பாடப்பெற்ற செஞ்சியின் தலைவன் ஒட்டக் கூத்தராலும் விக்கிரம சோழனுலாவில் கூறப்பட்டிருத்தல் ஈண்டு அறியற்பாலது. இதனால் இவ்விருபுலவர்களும் ஒரு காலத்தினர் என்பதும் நன்கு துணியப்படும்.

**8. வேணாடர் வேந்து :—**இவன் சேரமண்டலத்தின் உள் நாடுகளுள் ஒன்றாகிய வேணாட்டிலிருந்த ஒரு குறுநில மன்னன்; சேரர்மரபினன். முதற்குலோத்துங்க சோழன் காலத்திலேயே சேரவேந்தர் சோழமன்னர்க்குத் திறை செலுத்தும் சிற்றரசர் ஆயினர் என்பது கல் வெட்டுக்களால் அறியப்படும் உண்மையாகும். அவன் புதல்வன் விக்கிரமசோழன் ஆட்சியிலும் சேரர் அந்நிலையிலேயே இருந்தனர். அவர்களுள் கூத்தரால் உலாவிற் குறிக்கப்பெற்ற வேணாடர் வேந்தும் ஒருவனாவன். இவனது இயற்பெயரும் பிறவும் இக்காலத்தில் புலப்படவில்லை. வேணாடு என்பது திருவாங்கூர் நாட்டின் தென்பகுதிக்குரிய பெயராகும்.

**9. அநந்தபாலன் :—**இவன் முதற்குலோத்துங்கன் விக்கிரமன் ஆகிய இருவர் காலத்திலுமிருந்த ஒரு தலைவன். இளங்காரிக் குடையான் என்ற குடிப்பெயரும் சிவலோக நாயகன் என்ற இயற்பெயரும் கங்கைகொண்ட சோழ அநந்தபாலன் என்ற பட்டப்பெயரும் உடையவன். இவன் கி. பி. 1122-ல் திருவிடைமருதூரில் 'பெருந்திருவாட்டி' என்னும் பெயருடைய மடம் ஒன்று அமைத்துத் தைப்பூச நாளில் சிவனடியார்க்கும் பிறர்க்கும் உணவளிக்குமாறு மடப்புறமாக இறையிலி நிலம் விட்டனன் என்பது அவ்வூரிலுள்ள ஒரு கல்வெட்டினால் புலப்படுகின்றது. (S. I. I. Vol. V. No. 702) இவனே, முதற் குலோத்துங்க சோழனது ஆட்சியின் 47-ஆம் ஆண்டாகிய கி. பி. 1117-ல் திருவாவடுதுறையில் தன் பெயரால் ஒரு மடமெடுப்பித்து அதற்கு ஊர்ச்சபையாரிடம் பொருளளித்து நிலம் வாங்கிவிடும்படி ஏற்பாடு செய்துள்ளனன். (Ins. No. 148 of 1925) அது சிவலோக நாயகன் திருமடம் என்று வழங்கப்பெற்று வந்தது. இங்ஙனம் இவன் சோறுடுசாலை, மடம் முதலான அறநிலையங்கள் அமைத்துப் புரந்து வந்தமை,

"—தலைத்தருமம்
வாரிக் குமரிமுதல் மந்தாகினி யளவும்
பாரித் தவனநந்த பாலனும்—"

என்று கவிச் சக்கரவர்த்தியாகிய ஒட்டக் கூத்தராலும் பாராட்டப் பெற்றுள்ளது.

இனி, திருவாவடுதுறையில் 'சங்கரதேவன் திருமண்டபம்' என்னும் பெயருடைய மண்டபம் எடுப்பித்தவனும் 'பெருந் திருவாட்டி' என்னும் சோறிடுசாலை அமைத்தவனும் ஆகிய சேனாதிபதி சங்கரன் அம்பலங் கோயில்கொண்டான் என்பவனொருவன் விக்கிரமசோழன் ஆட்சிக்காலத்தில் இருந்துள்ளனன் என்பது சில கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது. இவனும் அநந்தபாலன் என்ற பட்டமுடையவன். திருவாவடுதுறை மடத்தில் மருத்துவம், இலக்கணம் முதலியவற்றைக் கற்போர்க்கு இவன் பொருளும் விளைநிலமும் கொடுத்துள்ளானென்பது அவ்வூரிலுள்ள கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. (Ins. Nos. 158, 159, 160, 161, 162 of 1925 and 171 of 1926). இவன் சிவலோக நாயகனான கங்கைகொண்ட சோழ அநந்த பாலனுக்குத் தந்தையோ அன்றி உடன் பிறந்தானோ என்னும் ஐயப்பாடு உண்டாகின்றது. ஒட்டக் கூத்தரால் உலாவிற் குறிக்கப்பெற்ற அநந்தபாலன் இவ்வம்பலம் கோயில் கொண்டானாக ஒருகால் இருத்தலுங் கூடும்; ஒரு தலையாகத் துணிதற்கு இயலவில்லை.

**10. வத்தவன் :—**இவன் முதற்குலோத்துங்கன், விக்கிரமன் ஆகிய இருவர் காலத்திலுமிருந்த படைத்தலைவர்களுள் ஒருவன், திருவிந்தளூர்* நாட்டுக்கஞ்சாறு† என்னும் ஊரினன்; முடிகொண்டான் என்ற இயற்பெயரை யுடையவன்; வத்தராயனென்ற பட்டமுடையவன். இது வத்ஸராஜன் எனவும் வச்சராயன் எனவும் வழங்கப்படும். வச்சத்தொள்ளாயிரம் என்ற நூல் இத்தலைவன்மீது பாடப்பட்ட ஒரு பிரபந்தமாயிருத்தல் வேண்டும் என்று கருதற்கு இடமுண்டு. இவன் மண்ணையில் பகைவர்களைவென்று வாகைசூடினான் என்று கூத்தர் கூறியுள்ளனர். மண்ணை என்பது பங்களூர்ஜில்லா நிலமங்கலந் தாலுகாவில் உள்ள ஒரு நகரமாதலின் இங்கேநிகழ்ந்தது மேலைச் சளுக்

* திருவிந்தளூர் என்னும் இவ்வூர் இந்நாளில் திருவழுந்தூர் என்று வழங்கப்படுகின்றது; மாயூரத்திற்கு அண்மையில் காவிரியின் வடகரையில் உள்ளது. † கஞ்சாறு என்பது இப்போது ஆநந்த தாண்டவபுரம் என்று வழங்கப்படுகின்றது என்பது முன்னரே கூறப்பட்டது.

கியருடன் நடத்திய போராதல்வேண்டும். (Epigraphia India Vol. 9. page 230) கோதாவரிஜில்லா இராமச்சந்திரபுரம் தாலூகாவைச்சேர்ந்த திராட்சாராமம் என்றவூரிலுள்ள பீமேசுவரமுடைய மகாதேவர்க்கு முதற்குலோத்துங்க சோழனது ஆட்சியின் 25-ஆம் ஆண்டில் இவன் ஒரு நுந்தா விளக்கு வைத்தனன் என்று அங்கேயுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. அக்கல்வெட்டு ஒருசெய்யுள் வடிவத்தில் உள்ளது. அது

"புயன்மேவு பொழிற் கஞ்சை* முதற்பஞ்ச நதிவாணன் புதல்வன்பூண்ட
வயமேவு களியானை முடிகொண்டான் மாநெடுவேல் வத்தர் வேந்தன்
இயன்மேவு தோளபயற் கிருபத்தை யாண்டதனி லிடர்க் கரம்பைச்
செயன்மேவு மீச்சுரற்குத் திருநந்தா விளக்கொன்று திருத்தினனே."

என்பதாம் (S. I. I. Vol. IV No. 1338). இவனே அக்கோயிலில் மற்றொரு நுந்தாவிளக்கு தன் பெற்றோர்கள் நற்கதியெய்துமாறு வைத்தனன் என்பது.

"ஸ்ரீகுலோத்துங்க சோழதேவற்கு யாண்டு நாற்பத்தாறுவது திருவிந்தளூர் நாட்டுக்கஞ்சாறன் பஞ்சநதி முடிகொண்டானன வத்தராயன் மாதா பிதாக்களைச் சா(ர்)த்தி இடர்க்கரம்பை மூல ஸ்ரீவீமநாத உடையார்க்கு............தா விளக்கொன்று................ இடையன்" (S. I. I. Vol. IV No. 1339) என்னும் கல்வெட்டினால் அறியக்கிடக்கின்றது. சோழமண்டலத் தலைவர்கள் வேங்கை, கங்கம், கலிங்கம் முதலான வடநாடுகளில் வென்றிமாலை சூடி இத்தகைய பல அறங்கள் புரிந்துள்ளமை கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது.

11. சேதிபர்கோன் :—இவன் சேதிராயன் என்ற பட்டமுடையவன்; சேதி நாடு எனவும் மலையமானாடு எனவும் வழங்கப்பெறும் நிலப்பரப்பைத் திருக்கோவலூரிலிருந்து ஆட்சிபுரிந்த குறுநில மன்னன்; விக்கிரம சோழனுக்குத் திறை செலுத்தி வந்தவன்; கருநாடரோடு போர்புரிந்து வெற்றியெய்தியவன். இவனைப் பற்றிய மற்றைச் செய்திகள் புலப்படவில்லை.

இனி, காரானை காவலன், அதிகன், வல்லவன், திகத்தன் இவர்களைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. இவர்களைப் பற்றிய செய்திகள் கிடைக்குமாயின் அவை பின்னர் வெளியிடப்பெறும்.

---

* கஞ்சை என்பது தஞ்சை என்று தவருகக் கல்வெட்டுப் புத்தகத்தில் அச்சிடப்பெற்றுள்ளது. இதன் உண்மையை மேலேயுள்ள இரண்டாம் கல்வெட்டால் உணரலாம்.

உ

# வள்ளல் மலையமான் திருமுடிக் காரி

(ஒரு சிறு நாடகம்.)

திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளையவர்கள்
தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 14, மலர் 7, பக்கம் 257)

## இயல்-உ காட்சி-க.

உறுப்பினர் :—நாகன், காடன், வேற்படைஞன்மாரி

பொழுது :—வேனிற்கால ஒரு பகற்பொழுது.

இடம் :— திருக்கோவலூர்ப்புறம்.

[வேற்படைஞன், காரியினது வெற்றியைக் காவலன்பாற் கூறல்.]

நாகன் :—(தனித்து) ஏ, அப்பா! இவ்வெயிலி லலைய எவராலாகும்? கள்ளியுங் கரிந்து போகுமாறு காய்கிறதே! கழுதை கெட்டால் குட்டிச்சுவரையடையும்: ஒரு தடியன்; மேலுங் கட்டிவிருந்து விடுபட்ட காளை போன்றவன், தொலைந்தால் எங்கு சென்று தேடுவது? (தன் தோழனிடம்) எடா, காட! இவ்வழி நெடுகச் சிறிது தொலைவு சென்று பார். அதற்குள் தென்படாவிடில், நேரே நாம் திரும்புவோம். இனி யான் நடக்கவியலாது. காடுமேடெலாம் அலைந்தமையால் உள்ளங்கால்கள் கொப்புளங் கொண்டன: அடியிட்டால் முள்மீதுநடப்பதுபோல் நைகின்றன.

காடன் :—நல்லவேளை. நீங்கள் நாடுபவரும் இதோ வருகின்றார். எனக்கு அலைச்சல் குறைந்தது.

நாகன் :—(வருபவனிடம்) அண்ணா! கும்பிடுகிறேன். எங்கிருந்து இப்பொழுது வருகிறீர்கள்? உங்களைத்தேடியே இவ்வெயிலில் கால்கடுக்க அலைந்தோம்; நல்லவேளை, எங்கள் கண்ணிற்பட்டீர்கள்.

வேற்படைஞன் மாரி :—என்னப்பா அவ்வளவு இரக்கம்? எனக்குள்ள அஞ்சற்செய்தி அப்படியென்னுளது?

**நாகன்** :—நமது தலைவர், கையோடு தங்களைக்கொண்டு வரச் சொன்னார்; இஃதன்றி வேறொன்று மின்று.

**வேற்படைஞன் மாரி** :—விளைந்ததா வினையியல்!............என் செய்வது? மழைநின்றும் தூவானம் நிற்கவில்லை. வேலையாவு முடித்து, விடுதிபெற்று வீடுசெல்லும்போதுகூடக் கூப்பாடு ஓய வில்லை....எய்தவனிருக்க அம்பை நோவதால் ஆய பயன் என்? என்ன கேடுவருமோ?

**நாகன்** :—அந்தோ! ஏனிவ்வாறு வருத்தம்?

**வேற்படைஞன்மாரி** :—உனக்கு இஃது ஒன்றுந் தெரியாது. நான் உண்மையாகக் கூறுகின்றேன், பார்; நான் செத்துப் போனதுஞ் சுடுகாடுகூடச் செல்லமாட்டேன்.

**நாகன்** :—ஐயகோ! ஏனண்ணு, இப்படி கவலைப்படலாமோ? உங்களுக்கென்ன வந்துற்றது; ஊதியமின்ரு, உணவுக்குறைவா, உடைக்கு வாட்டமா, அன்றி உறைவிடங்கெட்டதா? யாவும் மிகுந்துள்ள நீவிர் இவ்வாறெல்லாங் கூறுதலாகாது.

**வேற்படைஞன்மாரி** :—நீ மொழிவது மெய்தான், நாக! எனினும் எனது நிலைமை அவ்வாறுளது. உலகில் மகனுகப் பிறத்தலரிது; பின்னர், நல்லுடம்பும் பிணியிலா வாழ்வும்பெறு தல் அதனினுமரிது; மற்றும் நல்வாழ்வுடன் ஆண்மைகலந்த வலிமையோடு மிளிர்தல் யாவினுமரிது. இவை யாவுங்கூடியும், அமைதியோடு இன்பமாகச் சின்னுட்களாவது மகிழ்ச்சிபெரு விடில் அப்பிறப்பாற் பெற்ற பயன்தான் என்னை?

**நாகன்** :—பயனில்லை என்பது உண்மையே; என்ருலும், இவ்வுலகம் இன்பதுன்பம், களிப்பு-கவலை, நன்மை தீமை என இணைப்புற்றிருப்பதை மறந்து கூறுகின்றீர்களே.

**வேற்படைஞன்மாரி** :—மறக்கவில்லை; மற்றும் துன்பம் முத லாயவற்றிற்கு அஞ்சுபவன் யானல்ல. பொதுவாக, ஒருவன் பல்லாண்டுகள் துன்புற்ருல் சில்லாண்டுகளாயினும் இன்புறல் வேண்டும், என்றுதான் விரும்புகின்றேன். பிறந்தநாள்தொட்டு, செக்கிலோடும் எருதுபோல துன்பம், கவலை, துக்கம், இழிவு, ஏக்கம், எரிவு ஆய இவற்றுள்ளே மீண்டும் மீண்டும், சுழன்று சுழன்று செல்வதால், இவ்வாழ்வு நஞ்சாகவன்றோ மாறும்.

**நாகன்** :—யாவும் பொய்யன்று; இன்று உங்களுக்குற்ற தீங்கு என்ன?

வேற்படைஞன்மாரி :—நான், மலையன் படையிற்சேர்ந்து இதுபோது பன்னீராண்டுகள் கழித்தேன். தமிழகம் முழுதுஞ் சென்றுளேன். ஒருநாள்கூட ஒய்வுபெற்றேனல்லேன் நம் தலைவர் கடிய நெடுவில்லியோ, அவர்தம் பெயருக்கு ஏற்ப, என்றும் போர்க்களத்தே வாழுபவர். மற்றும் அவரது ஆணையோ, சொல்லுதற்கியலாதது. ‘ இன்றே யாவருஞ் செல்க சேரநாடு’ என்பர். அவ்வாறு சென்று ஆவனபுரிந்து மீளுமுன், ‘புறப்படுக சோழநாடு. நாம் இன்னே விரைந்தெழாவிடின், அந்தோ, சோழர்பெருமான் மிக்க இன்னலுறுவர்’ என ஆண்டு விடுப்பர். சோணாட்டாருடன்கலந்து நின்று போரிற்பகைஞருடன் பெருஞ் சமர் ஆற்றி, அக்களைப்பு, கலைவதன் முன்னரே, ‘எம் வீறுடை மக்காள்! நம்மன்னரின் உயிர்த்தோழன் பாண்டியன் நமதுதுணையைநாடுகின்றான். யாம் விரைந்து அவன்பாற் செல்லாவிடின், அந்தோ, அவன் பகைஞரால் கெடுவான்; நம்வேந்தரது பெயருக்கும் இழுக்குவரும்; நம் வள்ளலும் வருந்துவர். ஆதலால், எடுமின் படைக்கலம்! சேர்மின் பாண்டியர்நாடு’ என்று எங்களது உளங்கரையப்பேசி, அவர் கருத்துப்படியே எம்மை ஆடச் செய்வர். மிக்க திறன் பெற்றவர் நம் தலைவர். இவை போதாவென்று நம்மூர்க்கு, ஆரியப் படையெடுப்பு என்ற ஓர் அலங்கோலப்போரும் வந்தது. இவ்வாறிருந்தால், எங்கட்கு அமைதி, ஒய்வு, இன்பம், இவை எப்படிக்கிட்டும்? அன்பர், உறவினர், ஆன்றோர் ஆய இவருடன் கூடி மகிழ்வதுதான் எப்பொழுது? நீ தான் மறுமொழிகூறு, பார்ப்போம்.

நாகன் :—எனக்கு என்னதெரியும்? வீரர்நிலையென்றால் துன்பந்தான். உறவு, நட்பு இன்றிப் பன்னீராண்டுகள்போக்க என்னால் முடியாது. தங்கட்குத் தவறாது ஒய்வும், விடுதியும் மிகமிக வேண்டற்பாலதே. என், அண்ணா! ஆரியப்படைதனை வென்றசெய்தி விளக்கமாக எனக்குத்தெரியாது; அருள்கூர்ந்து அதனை எனக்கு அறிவிப்பீர்களோ?

வேற்படைஞன்மாரி :— அதற்கென்ன, சொல்லுகிறேன். நம்வேந்தர் நமது படையுடன் உறையூர்ச் சோழர்க்குத்துணை சென்று, அன்னவரது இராசசூய வேள்வியையும் முடித்துத் தந்து, ஆண்டுச்சிலதிங்கள் அளவளாவியிருந்தபோது, பிற குறுநிலத்தவரது சூழ்ச்சியினால், ஆரியநாட்டான் அதுவே தக்க செவ்வியெனக் கருதி நம்முடன் போர்புரிய ஒரு பெரும் படையுடன் நமது மூள்ளூர் மலைவரையில் வந்தனன்.

நாகன் :—இஃதெனக்கு நன்கு தெரியும்.

**வேற்படைஞன்மாரி :**—ஆரியனுக்கு, நமது படைகள்யாவும் உறையூர்ச் சமர் முடிந்ததும், திருக்கோவலூர் திரும்பியசெய்தி தெரியாது. மற்றும், நம்படை முதல்வரோ, ஒற்றர்வழியே அவனது வருகையை முன்னதாகவே யுணர்ந்து, நம்மன்னர்க்கு ஆட்போக்கிவிட்டு, நமது படையுடன் போருக்கு ஆயத்தமாகி முள்ளூரை நோக்கினர். முள்ளூர் எல்லையை மிதிக்குமுன், நம் திருமுடிக்காரி வேந்தரும், தமது வீறுபெற்ற காரியின்மீது இவர்ந்து ஆண்டுச்சென்ற யாவர்க்குங் காட்சியளித்தனர். பின்பு என்னதான் நடந்திருக்கும்? நீயே உணரலாமே.

**நாகன் :**—நீவிர் கூறிமுடித்த இவையாவும் யான் நன்கு அறிவேன். யான் தங்களிடம் விரும்பியது போர்நிகழ்ச்சியே யன்றி இவை யாவுமன்று.

**வேற்படைஞன்மாரி :**—போர் நிகழ்ச்சியாவேண்டும்? கேட்பாயாக. வேந்தர் பெருமானைக் கண்டோமோ இல்லையோ, எங்கட்கு ஏற்பட்ட ஊக்கத்துக்கு அளவேயின்று. ஆயிரமடங்கு மிக்க வலியவராயினேம். எங்களைப் பற்றிநின்ற நெடுந்தொலைவு நடந்ததாலேற்பட்ட களைப்பும் சென்றவிடம் அறியேம். போர்ப் பறை எழவே யாங்கள் யாவரும் வீறுற்று நின்றேம். பகல் பதினைந்து நாழிகை இருக்கும்; நமது படைகள் பகைஞரோடு கை கலந்தன. ஆரியன்படை நம்மினும் ஐந்து மடங்கு எண்ணாற்பெரியது; வலிமையும் கொடுமையுங் கலந்த வாள்வீரர் பன்னூற்றுவராக ஆண்டு நின்றனர்; எனினும், திறனின்றித் தக்க முறையின்றி அவர்கள் நம்மீது பாய்ந்தமையால் எளிதிற் புண்பட்டு வீழ்ந்தனர். பகைவருட் பெரும்பாலர், வேங்கை முன் வீழ்ந்த கடமாவென்ன, நம்மவர் முன்னே ஆற்றாது உயிரற்று மாண்டனர். அறிந்தான் ஆரியன்; தனது அறியாமைக்கு நாணினன்; நம்பா லச்சமிக்குடையானாகி எஞ்சியவருடன் புறமுதுகிட்டோடினன். இந்நிகழ்ச்சிகள் யாவும் பிற்பகல் இருபத்தேழு நாழிகைக்குள் நிறைவேறின. பின்னர், விண்முகடுவதிர வெற்றி முரசொலியும், வீரர்தம் ஆர்ப்பும், வெள்வளை யோசையும் நிரம்பியொலிக்க நம் திருமுடிக்காரி வள்ளல்வெற்றி வாகை சூடி மகிழ்வுற்றார். இவைதாம் அன்று நிகழ்வுற்றன. (**திடுக்கிட்டு**) ஏட, நாக! நீ வந்த அலுவலை மேற்கொள்ளாது என்னென்னவோ, போன செயல்களைப்பற்றியெல்லாம் இழுக்கின்றாயே. ஆமாம், எற்றிற்கு என்னை நம் தலைவர் அழைத்தார்? அச்செய்தியை இதுகாறும் சொல்லவில்லையே, நீ.

நாகன் :—நல்லவேளை, இப்பொழுதாவது நினைவு வந்ததே. அதனைக்கூறுமுன்னர்தான் இத்துணைப்பேச்சுக்களும் எழுந்தன. என்னவோ, ஏதோ என அஞ்சற்க; உங்களுக்கு ஒரு பெரிய பேறு வரப்போகிறது.

வேற்படைஞன்மாரி :—என்னடா, ஒரே அடியில் அளக்கின்றாய். நீ நல்ல தோழன்; புகழ்ந்தது போதும்; ஐயா ஏன், என்னை விரும்பினர்?

நாகன் :—ஐயோ! ஏனண்ணா, நான் உங்களிடம் பொய் கூறுவனோ? நம்மன்னர் பெருமான், நாளைமறுநாள், நமது நகரப் பொதுநலத் தலைவர்கள், பெரும்படைத் தலைவர்கள், பேரறிவாளர்கள், திருவமர் செல்வர்கள் ஆய பல பெருங்குடிமக்கள் சூழ விருந்து, இதுகாறும் போரிற் பெரும் பணியாற்றிய தங்கள் போன்ற தொண்டர்கட்கு, நம்நாட்டார் சார்பில் தமது மகிழ்ச்சி கலந்த நன்றிக்குற்ற அறிகுறியாக, வெற்றிமாலையும், வீரக்கழலும், கொற்றவாளும், கோநிகர் தகுதியும், பட்டமும் நல்கத் திருவுளங் கொண்டருளினமையால், அதற்காவனவும் நிகழ்கின்றன. அதுபற்றியே நம் தலைவரவர்கள் இன்னே, உங்களை அழைத்தமையாகும்.

வேற்படைஞன்மாரி :—ஓஃஓ! அப்படியா; இதனைக் குறிப்பிடாது நீ மொழிந்தமையால் என்னென்னவோவெல்லாம் எண்ணினேன். அதனாற்றான், மறுபடியும் எங்கே நமக்குத் தொல்லைகள்வருமோ வென ஐயுற்றே, யான் அவ்வாறு வெறுத்துப் புலம்பினேன். எனக்கு இன்று ஊரிலென்ன அலுவல்? வீண்பொழுது கழிப்பவன் தானே. இன்னும் எத்துணை நாட்கள் வேண்டுமாயினும் இருந்துவிட்டுச் செல்லுகிறேன். நேரமாயிற்று. நாகா, விரைந்து வருக; செல்லலாம்.

நாகன் :—அடேயப்பா! பெரிய ஆள் தானண்ணா தாங்களும். "குதிரை 'கொள்' என்றால் வாயைத் திறக்கும், 'கடிவாளம்' என்றால் பல்லைக் கடிக்கும்" என்ற பழமொழிக்கு உற்ற ஒருவரை இன்றுதான் நானும் கண்டேன். நன்றுநன்று, மிகமிக நன்று.

வேற்படைஞன்மாரி :—போடா, போக்கிலி. என் நிலையில் நீ இருந்தால், இன்னும் என்னைவிடப் பல பேசுவாய்; இப்பொழுது எமது துன்பம் உனக்கு எவ்வாறு தெரியும். நன்று, செல்வோம், வருக! (இருவரும் மகிழ்வுடன் மறைதல்).

காட்சி முடிவு.

# நெஞ்சறிவுறூஉ

கொடுமுடி வித்துவான். பே. கோவிந்தன்.

என்னே வாழ்க்கை! என்னே யுலகம்!
மின்னெனத் தோன்றி வீவது யாக்கை,
பொன்னெனப் பேணினும் புலவெறி கேணி;
பிணியும் மூப்பும் பெருகிடம்; உறையிடம்;
இன்ப மென்ப தெனைத்துங் கண்டிலம்;
துன்ப மனைத்தும் துய்த்தனம்; எய்த்தனம்
இயற்கையிற் பட்ட இடனையும் பொருளையும்
மயற்கை மாக்கள் தமவென வகுத்தனர்;
கூற்றினும், பொல்லாக் கொடுவாய் புலியினும்,
காற்றினும், தீயினும் கடும்புனற் பெருக்கினும்
இன்னல் புரியும் வன்க ணாளர்,
தந்நலம் பேணித் தமரென் றோது
காலையும் மாலையும் வேலை யேவுவர்;
உண்மின் என்னார்; உடுமின் என்னார்;
வம்மின் என்னார்; வாழ்மின் என்னார்;
இடம்படு நிலனில் எழில்மிகு பச்சை
புடவை விரித்தாற் போலும் புற்செறி
மணம்பெறு மருதினும், மாநில வுயிர்கள்
அணங்கொழிந் தெளிதின் அகல்வா னெய்த
நிரல்பட நிவந்த நெட்டிலைப் புல்லும்,
மருமிகு காந்தளும், மலர்மிகு குறிஞ்சியும்,
வரைபெறு வேயும், விரைசெறி வேங்கையும்
படியெனத் தோன்றும் தடவரைத் தேத்தும்,
வெய்யோன் செய்கைக் குய்யா மரங்கள்
பெய்துணை வளித்துப் பேரிடர் கெடுத்துக்
குலந்தழைப் பித்த கொண்மூ வினுக்குக்
கலந்த அன்பால் கனியும் மலரும்
கொடுத்துற வாடுங் குளிர்முல் லையினும்,
அகிலும் ஆரமும் அளித்த வரைக்குத்
துகிரும் முத்தத் தொகையும் மிளிர
எறியுந் திரைசேர் இருநெய் தலினும்,
மாவும், புள்ளும், மற்றவும் வயின்தொறும்
ஓட்டுவோ னின்றி ஓடி மகிழும்,
ஆட்டுவோ னின்றி ஆடி மகிழும்,

உண்புழி உண்ணும் ; உறங்குழி உறங்கும் ;
கண்புழிக் காணும், களிப்புழிக் களிக்கும் ;
பேதை மக்கட் பிறவியி லுண்டுகொல்?
மக்கள் வாழ்க்கை மாண்புடைத் தென்று
தக்கார் கூறார்; சாற்றுவோர் மடவோர்.
இழுக்க மிக்க இழிசினர்க் காளாய்
ஒழுக்க மின்றி உறைதலோ இன்பம் ?
பொய்யும் வழுவும் புகல்வோர்க் காளாய்
மெய்ம்மைகா ணுது வீதலோ இன்பம் ?
அறிவில் மக்கட் கடிமை யாகிச்
சிறுமை யெய்திச் சிறுகலோ இன்பம் ?
குடியர் வெறியர் கொடியோர்க் காளாய்
மடமை யெய்தி வாழ்தலோ இன்பம் ?
உணவு மின்றி உறைதலோ இன்பம் ?
மனையு மின்றி வாழ்தலோ இன்பம் ?
துணியு மின்றிச் சுற்றலோ இன்பம் ?
வன்மை யின்றி வாழ்தலோ இன்பம் ?
இன்மை வாய்ப்பட் டினைதலோ இன்பம் ?
கெடுக வாழ்நாள் கடிதென எண்ணும்
மடமிகு மனனே வருந்தல் ; கவலல் ;
பேதை நெஞ்சே ஓதுவன் கேண்மோ !
மாவும் புள்ளும் மகிழ்வொடு வாழினும்
ஏவம் பகையா லெய்த லின்றுகொல் ?
ஐயறி வுயிர்களின் ஆறறி வுயிர்கள்
செய்கையிற் சிறந்து திகழ்த லின்றுகொல் ?
பிறந்து மாயாப் பிறவியும் உண்டுகொல் ?
சிறந்து வாழ்ந்து சிறுகா ருண்டுகொல் ?
அடிமைப் பட்டிங் கலையினும் முன்னாள்
வடபனி வரையையும் வளவட நாட்டையும்
வென்றர சாண்ட வேந்தரும் நமரே !
மடமை யெய்தி வாழினும் முன்னாள்
கடல்கடந் தேகிக் கைப்பொருள் தேடி
உடல்நலம் பேணி ஒக்க லோம்பிக்
கற்பவை கற்றுக் கடிவன கடிந்து
நிற்கும் நெறியில் நின்று நூல் கல்லாக்
கயவர்க் கறநெறி காட்டினோர் நமரே !
மிடிமைப் பட்டு வீயினும் முன்னாள்
கொடிநெடு மாடம் குன்றென அமைத்து
மடவார் சிறுரொடு மகிழ்ச்சியின் வாழ்ந்தும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்செவி யுரியிற் கவினுற நெய்து

விரித்துக் கீழும் மேலும் உடுத்தும்
பொற்கலம் பற்பல பொலியப் பூண்டும்
அற்பொடு வறிஞர்க் காரமு தளித்தும்
இகழ்ச்சியி னிகந்து புகழ்ச்சியி னுயர்ந்து
மகிழ்ச்சியின் வாழ்ந்த மாந்தரும் நமரே!
இயலிற் சிறந்தோர், இசையிற் சிறந்தோர்,
நயமிகு நன்னா டகத்திற் சிறந்தோர்,
கலையிற் சிறந்தோர், கற்பிற் சிறந்தோர்,
கொடையிற் சிறந்தோர், குணத்திற் சிறந்தோர்,
படையிற் சிறந்தோர், பலரும் நமரே!
செந்தமிழ் நிலனுற் சிறுமையு முண்டுகொல்?
பைந்தமிழ் மாபால் பழியும் உண்டுகொல்?
நன்னெஞ் சேசொல்; இன்னும் கேண்மோ.
முன்னைப் பொருட்கும் முன்னைப் பொருளாய்ப்
பின்னைப் பொருட்கும் பின்னைப் பொருளாய்
அருளும் அறிவும் ஆற்றலும் பொருந்தி
உருவும் அருவும் ஒன்றினும் படாது
கருவுற லின்றிக் காடுற லின்றிப்
பெரிதிற் பெரிதாய்ச் சிறிதிற் சிறிதாய்
எங்கும் நிறைந்தே எவற்றையும் கடந்த
கந்தழிக் கடவுள் நந்தங் கடவுள்.
பிறர்தொழுங் கடவுளர் பிறந்திறந் தோரே.
வணங்குவா ரின்றி மறைந்தனர் பலரே.
தோற்றங் காணாத் தொன்மை வாய்ந்திங்
கேற்ற மிகுந்த இலக்கணம் வாய்ந்து
செம்பொருள் செறிந்த ஐம்பெருங் காப்பியம்
பத்துப் பாட்டே, பதினெண் கணக்கே,
எட்டுத் தொகையெனும் இலக்கியம் வாய்ந்து
சொன்னயம் பொருள்நயம் சுவைநயம் வாய்ந்து
நன்னடை வாய்ந்து நல்லிசை வாய்ந்து
தன்மை உண்மை நுண்மை காட்டி
வன்மை காட்டி வாழ்வு காட்டி
கற்றுணர் வார்க்குக் களிமகிழ் ஊட்டும்
நற்றமிழ் மொழியே நந்தாய் மொழியாம்.
பிறர்மொழி பின்னர்ப் பிறந்த மொழியே.
மொழிவா ரின்றி முதல்மொழி யழிந்தன.
தமரென் றுது பிறரென் றுது
நடுநிலை பிறழாது வடமொழி மொழியாது
மக்க ளெவர்க்கும் ஒப்பஅறங் காட்டித்
தக்க பொருள்பெறுஞ் சார்வு காட்டி
ஒத்த காத லொழுக்கங் காட்டி

எக்காலத்தும் இணையின்றி விளங்கும்
முப்பால் நூல்நம் முழுமறை நூலாம்.
பிறர்மறை நடுநிலை பிறழ்ந் தறங்கூறும்
மறம்அற மென்று வகுத்தன உளவே.
உண்மைக் கடவுளால் தொன்மை மொழியால்
செம்மை மறையால் திகழும் நாடெது ?
மெய்ம்மை புணர்த்தி விளங்கும் மரபெது ?
கந்தழிக் கடவுள் கழலிணை யல்லது
செந்தமிழ் நிலனிற் சீரிய நிலனிலை :
பொன்னுல கென்பது பூரியோ ருலகே.
புணர்ந்த மகளிரைப் புணர்தலும் புலாலெனும்
அவியுண வுணலும் அவர்பெறும் இன்பம்.
என்னொடு வாழும் நன்னெஞ் சேகேள்.
நின்னை வேண்டுவன் பன்முறை யானும்
இறந்து பிறப்ப தியையு மாயின்
மறந்திடல் பிறந்திவண் வாழ்தல் வேண்டு.
பண்டு போலப் பலரும் புகழத்
தண்டமிழ் நாடும் தமிழ்நில மாந்தரும்
அடிமையி னீங்கி, மிடிமையி னீங்கி,
மடமையி னீங்கி வாழுவர் ;
நெடுமுடி புனைவர் நிலமிசை யானே.

# தமிழ்ச் செய்திகள்

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

### விரிவுரைக் கூட்டம்

நிகழும் வெகுதானிய, கார்த்திகை, ௰௨ (27—11—38) ஆம் நாள் ஞாயிறு மாலை மணி '௫'க்குத் தஞ்சைக் கரந்தைத் தமிழ்ப் பெருமன்றத்தில் தோரமங்கலம் திருவாளர் ஆசிரியர், அ. வரத நஞ்சையபிள்ளையவர்கள் " தமிழ்மொழியுங் கவிஞர்பெருமையும்" என்ற பொருள்பற்றித் தெள்ளிய தமிழ்நடையில் செவிக்கினிய சொற்பொழிவாற்றினர்கள்.

கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவ முதலிய மொழிகளுக்குத் தாயென விளங்குந்தகவும், பிறமொழி யருங்கலைகளைத் தன்கண் உடைத்தாதற்கேற்ற பெருமையும், பூவலம்படச் சுழலல்போன்று வலம்படவெழுதப் பெறும் எழுத்தும், சுருங்கச்

சொல்லல் எனும் வனப்பும்பெற்றது தமிழ்மொழியென்றும், அன்பே கடவுள் என்னும் உண்மையினையுணர்த்தி அன்பினை யகத்தும் வீரத்தினைப் புறத்துங்கொண்டு மக்களை வாழ்விப்பன இம்மொழியின் நூல்களேயென்றும், இயற்கைப் பொருள்களைக் கூர்ந்து நோக்கு முயர்வும், கரிசற்ற உள்ளப்பண்பும், பொருள் எதிர்நோக்காது புரவலர்க்கு அற்றம் நோக்கி அறிவுரைகூறி அவர்களிடத்துத் தீயனகண்டபோது அவரை யிடித்துரைத் துத் திருத்து மியல்புங் கொண்டு அரசரும் மக்களும் ஒருங்கு போற்ற வறுமையிற் செம்மைபெற்று வாழ்ந்த கவிஞர்கள் பண்டைத் தமிழ்ப்புலவர்களே யென்றும் ஆசிரியரவர்கள் தம் சொற்பொழிவிற் குறிப்பிட்டார்கள்.

முடிபு I:- தமிழ்ப்புலமை மிக்கவரும் தனதுவாணாள்முற்றும் தமிழ்த்தொண்டிற்காக்கி உழைத்தவரும் "கலாநிலையம்" எனுஞ் செந்தமிழ்த்தாளை நடத்தி வந்தவருமாகிய திருவாளர். T. N. சேடாசலமையர் அவர்கள் (B.A., B.L., வழக்கறிஞர், சென்னை) இளவயதிலே உலக வாழ்க்கையை நீத்தசெய்தி இச்சங்கத் தினர்க்கு அளவிடற்கரிய துயரை விளைத்தது. திரு. ஐயரவர் களின் மனைமக்கட்கு இச்சங்கத்தின் இரங்கலைத்தெரிவிப்பதென முடிவு செய்யப்பெற்றது.

முடிபு II:— தனித் தமிழ்ப் பல்கலைக் கழகத்தாலாவனவெல் லாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால் முடியுமென அரசிய லார் உறுதிகொண்டு ஆக்கியதும், இப்பல்கலைக் கழகத்தின் தலைவர்கள் தமிழ் வளர்ச்சியைச் சிறந்த முறையில் பேணுவது இக்கழகத்தின் முக்கிய நோக்கமெனக் கூறிவந்ததும், கலை நூல்கள் அனைத்தையும், தமிழ்மொழியில் கற்பிக்கும் பொருட்டு அவற்றைத் தமிழில் மொழி பெயர்க்கத் தொடங்குமாறு கழகப் பேரவையினர் முடிவு செய்ததும் ஆகிய இக்கோட்பாடுகளைப் புறக்கணித்துத் தமிழ்மொழிக்கென இக்கழகத்தில் சிறப்புரிமை யாதுமின்றென வன்கண்மையுடன் பல்கலைக்கழகத்தின்பேரவை யில் அழிவழக்குப்பேசிய கழகத்துணைவேந்தர், கனம், திரு வாளர், V. S. சீநிவாசசாத்திரியாரின் கொடுஞ்செயலை இச்சங்கம் வன்மையுடன் கண்டிக்கிறது.

இம்முடிபை உரியவர்கட்கு அனுப்புவதென முடிவு செய் கிறது. மேற்கண்ட இருமுடிபுகளையும் ஒருமையொடு நிறை வேற்றிய பின்னர் அமைச்சரவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிது நிறைவேறியது.

**தில்லைத் தமிழ்க் கழகம் சிதம்பரம்**—இக்கடிதம், 1938 நவம்பர்-உயிஎ., ஆம் நாள் கூடிய வினைக்குழுவின் முடிபுப்படி, நமது சங்கத்துடன் இணைப்புபெற கழக அமைச்சர் கீழ்வரும் முடிபை நமக்கு அனுப்பியுள்ளார். அம்முடிபு வருமாறு:—

"தமிழகத்தின் தற்கால நிலையை நோக்குழி தமிழ் மக்களுடைய ஆக்கத்துக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் உண்மையாய்ப் பாடுபடும்கழகங்கள் தனித்திருந்து தொண்டாற்றலினும் ஒரு பெருங் கழகத்துடன் இணைக்கப்பெற்றுத் தொண்டாற்றின் மேற் கூறிய இருவகையினும் ஊக்கமும் வலிவும் உறுதிப் பாடும் விளையும், ஆதலால், இத்தில்லைக் கழகத்தையும் இருபத்தைந்து ஆண்டுகட்குமேல் சிறந்த முறையில் தமிழருக்கும் தமிழுக்கும் பணிசெய்து வரும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் இணைத்தல்வேண்டும் என்று தீர்மானிக்கப் பெற்றது."

இத்துடன் M. O.ல், ரூபா மூன்று அனுப்பியுள்ளேன்.

இங்ஙனம், தங்கள் அன்பன்,

ச. க. கோவிந்தசாமி.

---

**இராமநாதபுரம் சில்லா தமிழர் மாநாடு காரைக்குடி 4-12-38 முடிபுகளில் சில வருமாறு:**—அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அறிவு நூல்களைத் தமிழில் கற்பிக்கவேண்டும்; அது தமிழ்ப் பல்கலைக் கழகமென ஏற்கப்படவும் வேண்டும்.

தமிழ் நாட்டிலுள்ள கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் அனைவரும் தமிழ் கட்டாயமாகக் கற்கவேண்டுமென அரசியலார் சட்டம் இயற்றவேண்டும்.

அறிவு நூற்களையும், தொழிற்கலை, கவின் கலைகளையும் தமிழில் கற்பித்தற்கான வசதிகளை அமைத்தற்பொருட்டு ஒரு கழகம் ஏற்படுத்தவேண்டும்.

தமிழ் நாட்டினின்றும் கல்லாமையை ஒழிப்பதற்காக கட்டாயமான இலவசக் கல்வியைத் தமிழ் நாடெங்கும் வழங்குதற்காகத் தொடக்கக் கல்லூரிகள் ஏற்படுத்த அரசியலார் உடனே திட்டஞ் செய்யவேண்டும்.

# புத்தக மதிப்புரை

மறவர் சரித்திரம் :—இது மறவர் குலத்தவரின் வரலாற்றினைப் பழந்தமிழ் இலக்கியங்கள், சரித நூல்கள், கல்வெட்டுகள் ஆதிய ஆதாரங்களைக் கொண்டு ஆய்ந்து இயற்றப் பெற்ற ஆராய்ச்சி நூல். செந்தமிழ்ப் புரவலர்களாயுள்ள சேதுமன்னர் தலையாய குறுநில மன்னர்கள், பெருநிலக்கிழவர்கள், போர் வீரர்கள், ஊர்காவலர்கள் ஆதிய பலதிறத்தினும் பெற்றிமை வாய்ந்த பழங்குடிமக்கள் இம்மரபினர் என்பது இந்நூலால் தெற்றெனை விளங்குகின்றது.

தமிழ்மக்கள் யாவரும் படித்து, இத்தொல்குடியினர் பண்டைச்சிறப்புகளை எய்துவித்தற் பொருட்டு எளிய நடையில் இயற்றப் பெற்றுள்ளது. இவ்வரிய தொண்டைப் புரிந்த சீவைகுண்டம் உயர்தரப்பள்ளியின் தலைமைத் தமிழாசிரியர் திரு. V. S. குழந்தைவேலுச்சாமி அவர்கட்கும், தேவர்குளம் நிலக்கிழவர் திரு. A. V. ஆசீர்வாத உடையார்த்தேவர் அவர்கட்கும், இதனை வெளியிட்டுதவிய தேவர்குளம் திரு. V. S. தியாகராசபாண்டியன் அவர்கட்கும் தமிழ்நாட்டின் நன்றி உரியதாகும்.

விலை ரூபா 1—8—0.

ஸ்ரீஅரவிந்தயோக தீபிகை. தமிழுணர்ச்சி. யோகசித்தி. புத்தர் கருணை:—இவை நான்கும் திரு. சுத்தானந்த பாரதியார் அவர்களால் இயற்றப்பெற்று, திருச்சிராப்பள்ளிசில்லா இராமச்சந்திரபுரத்து அன்பு நிலையத்தாரால் வெளியிடப்பெற்றவை.

புத்தர்கருணை :—என்பது அருமைவாய்ந்த நாடகநூல். மாந்தரின் இன்னல்களைக் கண்டு, அருளிரக்கத்தால் மனமுருகி அரசு துறந்த செய்தி மெய்ப்பாடு விளங்க எழுதப்பெற்றிருக்கின்றது. இதன் விலை அணு 8.

யோக தீபிகையும், யோக சித்தியும் :—ஆசிரியர் அவர்களின் முதிர்ந்த அனுபவத்தில் கண்டவை. நுண்ணிய பொருள்கள் எளிதே விளக்கப் பெற்றிருக்கின்றன. அறிஞர்கள் இவற்றைப் பல்காலும் பயின்று மிகு பயன் பெறுவர்.

யோக தீபிகை விலை அணு 8. யோக சித்தி விலை ரூபா 2.

**தமிழுணர்ச்சி:**—பண்டைத் தமிழ்மக்களின் சீரிய பண்புகளையும், அரிய செயல்களையும் அகச்சான்று, புறச்சான்றுகள் கொண்டு இயற்றிய சிறந்ததோர் ஆய்வுரை. உறங்கிக்கிடக்கும் தமிழுலகை அறைகூவி எழுப்பி நன்னிலைக்கண் உய்க்கும் கருத்துடன் பயனுள்ள தமிழ் நூல்களை வெளியிட்டுவரும் ஆசிரியர் அவர்கட்கும், அன்பு நிலையத்தார்க்கும் தமிழறிஞரின் நன்றி உரியதாகும். விலை ரூபா 1.

---

## கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அன்பர்கள் உதவிய நன்கொடை

### (வெகுதானிய, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை.)

| | | | |
|---|---|---|---|
| அரசியலார் நன்கொடை (சுவடி நிலயத்துக்கு 2 ஆண்டுக்கு | 168 | 0 | 0 |
| திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் (சுவடிகள்) | 147 | 2 | 6 |
| ,, P. S. T. V. அண்ணாமலைசெட்டியார் ,, மூவார் | 55 | 0 | 0 |
| திரு. சி. வேதாசலம் பிள்ளை அவர்கள் B.A., B.L., மதுரை | 10 | 0 | 0 |
| ,, ச. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் B.A.,L.T., கடலூர் | 10 | 0 | 0 |
| ,, க. நா. சின்னையன், கரந்தை | 0 | 4 | 0 |

## மருத்துவசாலைக்குதவிய அன்பர்கள் நன்கோடை.

| | | | |
|---|---|---|---|
| தஞ்சை நகராண்மைக் கழகத்தார் | 125 | 0 | 0 |
| திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் (மருந்து—பொருள்) | 50 | 0 | 0 |
| கரந்தைத் தமிழ்ச் சங்கக்கல்லூரி | 20 | 0 | 0 |
| திரு. சி. வேதாசலம் பிள்ளை B.A.,B.L., அவர்கள் | 3 | 0 | 0 |
| ,, வீ. சு. பெரியநாயகத்தம்மையார் (மருந்து) | 2 | 4 | 0 |
| ,, க. நா. சின்னைய நாயுடு | 1 | 0 | 0 |
| உண்டியல் வரவு | 2 | 0 | 0 |

---